தனிப் பிரதிவிலை அணா 0—1—6

Reg. No. M. 3066 1936-ஆகஸ்ட் 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் 2. இதழ் 4.

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

ரோஜா முத்தையா

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களைச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்

விஷய அட்டவணை. பக்கம்.

ஆரியர் கொடுமை (பாட்டு) (அண்ணல் தங்கோ) 1
நமது கடவுள்கள் (சோதனை விளக்கு) 5
ஹிந்து மதத்தில் பெண்கள் நிலைமை (ஒரு தயாளர்) 11
அறிவைக்கெடுத்தவர்கள் ஆச்சாரியார்களே.
(கைவல்ய சாமியார்) 18
நூறாண்டு வாழ்வதெப்படி? (வை. இராஜரத்தினம்) 25
சந்திரன் (எம். சிங்காரவேலு) 32
மத நம்பிக்கைக்குச் சாவுமணி 36
நான்கு வருடங்களுக்கப்பால் (கதை)
(ஜே. பி. கிருஷ்ணன்) 40
ருஷிய ஆலயங்கள் 51
நாஸ்திகம் (ஜாக் பெஞ்சமின்) 52
சோம்பேறி வாழ்க்கை (மலாய் மணி) 53
மதபோதனை ஒழியுமா? (எம். ஜே. கோல்டு) 58
தாமஸ் பெயின் 61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 2. } ஈரோடு 1936 ஆகஸ்டு 1. { இதழ் 4.

ஆரியர் கொடுமை.

(குடியேற்றம்—அண்ணல் தங்கோ)

"நாதவிந்துகலாதி நமோ நம" என்ற திருப். இ. பா.

1. மாதர் தம்மை அடிமைப் படுத்தியும்
மானிடர்களை தாழ்த்தியடக்கியும்
வாதம் பேசியே "வேத"த்தை நீட்டுவர் மதிபோக்கும்

2. மாசுடைப்பல் யாகப் பெயர் சொலி
வாயிலா உயிர் தம்மை வதைப்பவர்
மாண்பிலாதபடுவஞ்ச நெஞ்சர்கள் செய்யும் "யாக"

3. ஏதங்கூறி உயிர்கட் கிரங்கியே
நீதிகாட்டி மறுத்த தமிழ்ப்பெண்ணை
ஈர நெஞ்சமிலாது "அரக்கி" யென் றிசைத்தோர்கள்

4. ஏவல் கேட்டு குருத்தன்மை பூண்டவர்!
ஆவல் காட்டி பொருளைப்பறிப்பவர்!
ஏணிமிதியடி போலே நடத்துவர் எளியோரை

5. சூது சூழ்ச்சிசெய்தே என்றும் வாழ்பவர்!
தீது அன்றி செயக் கற்றிலாதவர்
சூரியர்க்கு மனைவியுண்டென்பவர்! சுராபான

6. சோகை கோலையத் தமிழர்க்களித்தவர்
ஈகையென்னுமோர் சொல்லுங் கேளாதவர்
சோம்பித்தமிழரை ஏமாற்றியுண்பவர்! பழிகாரர்!

7. போதமிக்க அறத்தொண்டர் புத்தரை!
கோது கூறிக்கொலை செய்யப் பார்த்தவர்!
போற்றும் மாண்புடை சமணரை மாய்த்தவர்!
உறவாமோ?

8. போதும்! போதும்! இவர் செய்த சூழ்ச்சியும்
போதும்! போதும்! இவர் தங்கள் தெய்வமும்
போதும்! போதும்! அவர் தந்த மோட்சமும்!
இனி வேண்டாம்!!

சுய அறிவும், கற்பனா சக்தியும் அமுக்கப்பட்டு, மக்கள் அனைவரும் அறியாமையில் ஆழ்ந்து, பழையனவெல்லாம் தெய்வீகமானது என்றும், புதியனவெல்லாம் மதவிரோதமானதென்றும் நம்பிக்கையுடன் புதிதாக ஒன்றையும் அறியவும், பின்பற்றவும் முடியாதிருந்ததினால் அல்லவா இங்கு வியாபாரம் செய்வதற்காக வந்த ஒரு சில அந்நியர்களுக்குள் இந்தியா எளிதாக விழத்தக்க நிலைக்கு வந்தது.

(டாக்டர் பராஞ்சிபே)

நமது கடவுள்கள்.

(சோதனை விளக்கு)

1. பிள்ளையார்

இந்துமதம் என்பதில் உள்ள கடவுள்களின் எண்ணிக்கை "எண்ணித்தொலையாது ஏட்டிலடங்காது" என்பது போல் எண்ணிக்கைக்கு அடங்காத கடவுள்கள் சொல்லப்பட்டிருப்பதும், அத்தனை கடவுள்களுக்கும் புராணம், கோவில், குளம், பூஜை, உத்சவம், பஜனை பாட்டு முதலியவைகள் ஏற்படுத்தி இருப்பதும், அவைகளுக்காக நமது இந்திய நாட்டில் வருடம் ஒன்றுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களும், பல கோடி ரூபாய் பெறும்படியான நேரங்களும், பலகோடி ரூபாய் பெறும்படியான அறிவுகளும் வெகுகாலமாய் பாழாகிக் கொண்டு வருவதும் எவராலும் சுலபத்தில் மறுக்கக்கூடிய காரியமல்ல.

இக் கடவுள்களில் முதன்மை பெற்றதும், மக்களிடம்மிகவும் செல்வாக்குப் பெற்றதும், இந்துக்கள் என்போர்களில் ஏறக்குறைய எல்லோராலும் ஒப்புக்கொண்டு வணங்கப்படுவதுமான கடவுள் பிள்ளையார் என்பது. இதனைக் கணபதி என்றும், விநாயகன் என்றும், விக்கினேஸ்வரன் என்றும் இன்னும் இதுபோன்ற பல நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்லி அழைப்பதும் உண்டு.

பிற்க, இந்தப் பிள்ளையார் என்னும் கடவுளை இந்துக்கள் என்பவர்கள் தங்களுடைய எந்தக் காரியத்திற்கும் முதன்மையாய் வைத்து வணங்குவதும் கடவுள்களுக்கெல்லாம் முதல் கடவுளாக வணங்குவதுமாக இப்போது அமுலில் இருக்கும் வழக்கத்தை எந்த இந்து என்பவராலும் மறுக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்டதான யாவராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதும், அதிகசெல்வாக்குள்ளதும், முதற் கடவுளென்பதுமான பிள்ளையாரின் சங்கதியைப்பற்றி சற்று கவனிப்போம். ஏனெனில் கடவுள்களின் சங்கதி தெரிய

வேண்டுமானால் முதல் முதலாக முதற்கடவுளைப்பற்றித் தெரிவதுதான் நன்மையானதாகும். ஏனெனில் முதல் கடவுள் என்று சொல்லப்படுவதின் சங்கதி இன்னமாதிரி என்பதாகத் தெரிந்தால் மற்ற கடவுள்கள் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாயிருக்கலாம். அன்றியும் எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையார் காரியத்தைக் கவனிக்கவேண்டியது முறையென்று சொல்லப்படுவதால் நாமும் கடவுள்களின் கதைகளைப்பற்றி விளக்கப்போவதில் முதல் கடவுளைப்பற்றி ஆரம்பிக்க வேண்டியதும் முறையாகுமன்றோ. இல்லாவிட்டால் "அக் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு எடுத்த இக் காரியத்திற்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்". அன்றியும் சமீபத்தில் அக் கடவுளின் உற்சவம் (பிள்ளையார் சதுர்த்தி) ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் இது சமயம் பொருத்தமானதாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குதும்.

பிள்ளையார் பிறப்பு

1. ஒருநாள் சிவனின் பெண்ஜாதியான பார்வதிதேவி தான் குளிக்கப்போகையில் குளிக்குமிடத்திற்கு வேறு ஒருவரும் வராமல் இருக்கும்படியாக ஒரு காவல் ஏற்படுத்துவதற்காகத்தனது சரீரத்தில் உள்ள அழுக்குகளைத் திரட்டி உருட்டி அதை ஒரு ஆண் பிள்ளையாகும்படி கீழே போட்டதாகவும், அது உடனே ஒரு ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், (ஆகலாமல்லவா, எப்படி எனில் மாட்டின் மலமான சாணிப் பிண்டமே பிள்ளையாராகின்றபோது பார்வதியின் அழுக்கு பிள்ளையாராவது அதிசயமா?) அந்த ஆண் குழந்தையைப் பார்த்து "நான் குளித்துவிட்டு வரும்வரையில் வேறு யாரையும் உள்ளே விடாதே" என்றுசொல்லி அதை வீட்டு வாயிற்படியில் உட்கார வைத்திருந்ததாகவும், அந்தச் சமயத்தில் பார்வதியின் புருஷனான பரமசிவன் வீட்டிற்குள் புகுந்ததாகவும், அழுக்குருண்டையான வாயில் காக்கும் பிள்ளையார் அந்தப் பரமசிவனைப்பார்த்து "பார்வதி குளித்துக்கொண்டிருப்பதால் உள்ளே போகக் கூடாது" என்று தடுத்ததாகவும், அதனால் பரமசிவக் கடவுளுக்கு கோபம் ஏற்பட்டு தன் கையிலிருந்த வாளாயுதத்தால் ஒரே வீச்சாக அந்தப் பிள்ளையார் தலையை வெட்டிக் கீழே தள்ளிவிட்டு குளிக்குமிடத்திற்குள் போனதாகவும், பார்வதி சிவனைப் பார்த்து "காவல் வைத்திருந்தும் எப்படி உள்ளே

வந்தாய்” என்று கேட்டதாகவும், அதற்குச் சிவன் “காவல்காரன் தலையை வெட்டி உருட்டிவிட்டு வந்தேன்” என்று சொன்னதாகவும், இது கேட்ட பார்வதி தான் உண்டாக்கின குழந்தை வெட்டுண்டதற்காகப் புரண்டு புரண்டு அழுததாகவும், சிவன் பார்வதியின் துக்கத்தைத் தணிக்கவேண்டி வெட்டுண்டு கீழே விழுந்த தலையை எடுத்து மறுபடியும் ஒட்ட வைத்து உயிர் கொடுக்கலாம் எனக் கருதி உடனே வெளியில் வந்து பார்க்க வெட்டுண்ட தலை காணாமல் போனதாகவும், அப்போது அருகிலிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி முண்டமாகக் கிடந்த குழந்தையின் கழுத்தில் ஒட்ட வைத்து அதற்கு உயிர் கொடுத்து பார்வதியை திருப்தி செய்ததாகவும் கதை சொல்லப்படுகின்றது. இக் கதைக்கு சிவ புராணத்திலும் கந்த புராணத்திலும் ஆதாரங்களுமிருக்கின்றனவாம்.

2. ஒரு காட்டில் ஆண் பெண் யானைகள் கலவி செய்யும்போது சிவனும் பார்வதியும் கண்டு கலவி ஞாபகமேற்பட்டுக் கலந்ததால் யானை முகத்துடன் குழந்தை பிறந்தது என்றும் பிள்ளையார் கதையில் கூறுகின்றதாம்.

3. பார்வதி கர்ப்பத்தில் ஒரு கரு உற்றிருக்கையில் ஒரு அசுரன் அக் கருப்பைக்குள் காற்று வடிவமாகச் சென்று அக் கருச்சிசுவின் தலையை வெட்டிவிட்டு வந்ததாகவும், அதற்குப் பரிகாரமாகப் பார்வதி யானையின் தலையை வைத்து உயிர் உண்டாக்கி குழந்தையாகப் பெற்றுக்கொண்டதாகவும் விநாயகர் புராணம் கூறுகின்றதாம்.

4. தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காக சிவன் தனது மூத்த குமாரனாகிய கணபதியை அனுப்பியதாகவும், தக்கன் அக்கணபதி தலையை வெட்டி விட்டதாகவும், சிவன் தனது இரண்டாவது பிள்ளையாகிய சுப்பிரமணியனை அனுப்பினதாகவும், அவன் போய் பார்த்ததில் தலை காணப்படாமல் வெறும் முண்டமாய்க் கிடந்ததாகவும் உடனே ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்ப்பித்ததாகவும் மற்றொரு கதை சொல்லப்படுகின்றது. இது தக்க யாகபரணி என்னும் புஸ்தகத்தில் இருக்கின்றதாம்.

இன்னும் பலவழிகள் சொல்லப்படுகின்றன. அதனைப் பற்றியும் இப்பிள்ளையாரின் மற்ற கதைகளைப் பற்றியும் மற்றொரு சமயம் கவனிக்கலாம்.

எனவே பிள்ளையார் என்னும் கடவுள் சிவனுக்கோ பார்வதிக்கோ மகனாகப் பாவிக்கப்பட்டவர் என்பதும், அந்தப்பிள்ளையாருக்கு யானைத்தலை செயற்கையால் ஏற்பட்டதென்பதும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமாகும்.

கடவுள் கூட்டத்தில் முதல்வரான பிள்ளையார் சங்கதியே இப்படிப்பலவிதமாகச் சொல்லப்படுவதும், அவைகளிலும் எல்லாவிதத்திலும் அவர் பிறரால் உண்டாக்கப்பட்டதாகவும், பிறப்பு வளர்ப்பு உடையவராகவும் ஏற்படுவதுமானதாயிருந்தால் மற்றக் கடவுள்கள் சங்கதியைப்பற்றி யோசிக்கவும் வேண்டுமா? நிற்க, ஒரு கடவுளுக்குத் தாய் தகப்பன் ஏற்பட்டால் அந்தத் தாய்தகப்பன்களான கடவுள்களுக்கும் தாய்தகப்பன்கள் ஏற்பட்டுத்தானே தீரும்? (இவைகளைப்பார்க்கும்போது கடவுள்கள் தாமாக ஏற்பட்டவர்கள் என்றால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஆகவே இந்தக் கடவுள்களும் உலகமும் ஏற்பட்டதற்கு வேறு ஆதாரங்களைக்கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கின்றது. இதனைப் பின்னால் கவனிக்கலாம்.)

கடவுளைப்பற்றிய விவகாரங்களோ சந்தேகங்களோ ஏற்படும்போது மாத்திரம் "கடவுள் ஒருவர்தான், அவர் நாமரூப குணமற்றவர், ஆதியந்தமற்றவர், பிறப்பு இறப்பு அற்றவர், தானாயுண்டானவர்" என்று சொல்லுவதும் மற்றும் "அது ஒரு சக்தி" என்றும், "ஒரு தன்மை அல்லது குணம்" என்றும் பேசி அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக்கொண்டு பிறகு இம்மாதிரி கடவுள்களைக் கோடி கோடியாய் உண்டாக்கி அவைகளுக்கு இதுபோன்ற பல ஆபாசக்கதைகளை வண்டி வண்டியாய்க் கற்பித்து அவற்றையெல்லாம் மக்கள் நம்பவும் வணங்கவும் பூஜை செய்யவும் உற்சவம் முதலியன செய்யவும் செய்வதில் எவ்வளவு அறியாமையும் புரட்டும் கஷ்டமும் நஷ்டமும் இருக்கின்றன என்பதை வாசகர்கள் தான் உணரவேண்டும்.

உதாரணமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றோம். சிதம்பரக் கோவிலில் யானைமுகங்கொண்ட ஒரு பிள்ளையார் சிலை செய்து அதன் தும்பிக்கையை மற்றொரு பெண் சிலையின் பெண்குறிக்குள் புகவிட்டு இக்காட்சியை யாவருக்கும் தெரியும்படியாகச் செய்திருப்பதுடன் இந்தக்காட்சிக்கு தினமும் முறைப்படி பூசையும் நடந்து வருகிறது.

பல ஆண் பெண் பக்தர்கள் அதைத் தரிசித்துக்கும்பிட்டும் வருகின்றார்கள்.

சில தேர்களிலும் ஒரு பிள்ளையார் உருவம் தனது துதிக்கையை ஒரு பெண் உருவத்தின் பெண் குறியில் புகுத்தி அப்பெண்ணைத் தூக்கிக் கொண்டிருப்பது போலவும், அந்தப் பெண் இரண்டு காலையும் அகட்டிக்கொண்டு அந்தரத்தில் நிற்பது போலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளைப்பார்த்த யாராவது இது என்ன ஆபாசம் என்று கேட்டால் இவைகளுக்கு ஒரு கதையும் புராணமும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அதாவது ஏதோ ஒரு அசுரனுடன் மற்றொரு கடவுள் யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்தில் தோன்றிய அசுரர்களையெல்லாம் அந்தக் கடவுள் கொன்று கொண்டே வந்தும், தன்னால் முடியாத அளவு சூரர்கள் ஒரு அசுரஸ்திரீயின் பெண் குறியில் இருந்து ஈசல் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போல் பல லக்ஷக்கணக்காய் வந்துகொண்டே இருந்ததாகவும், இதை அறிந்த அந்தக்கடவுள், பிள்ளையார் கடவுளின் உதவியை வேண்டியதாகவும், உடனே பிள்ளையாரானவர் ஈசல் புற்றிலிருந்து ஈரடி ஈசல்களை உறிஞ்சுவது போல் தனது தும்பிக்கையை அந்த ஸ்திரீயின் பெண் குறிக்குள் விட்டு அங்கிருந்த அசுரர்களையெல்லாம் ஒரே உறிஞ்சாக உறிஞ்சி விட்டதாகவும் சொல்லப்படுகின்றது. எனவே இம்மாதிரியான காட்டுமிராண்டித் தன்மையான ஆபாசங்களுக்கு, கண்டவைகளையெல்லாம் கடவுள் என்று சொல்லும் "ஆஸ்திகர்கள்" என்ன பதில் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

"எவனோ ஒருவன் ஒரு காலத்தில் இப்படி எழுதிவிட்டான்" என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டால் போதுமா? இன்றையத்தினமும் அவ்வெழுத்துக்கொண்ட ஆதாரங்கள் போற்றப்படவில்லையா? அன்றியும் பல கோவில்களில் உருவாரங்களாகத் தோன்றவில்லையா? இதை "எவனோ ஒருவன் செய்துவிட்டான்" என்று சொல்வதானால் இவைகளுக்குத் தினமும் பெண்டுபிள்ளை வாகனம் முதலியவைகளுடன் பூஜைகள் நடக்கவில்லையா? என்பது போன்றவைகளைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சீர்திருத்தக்காரர்கள் "அப்படி இருக்க வேண்டும்" "இப்படி இருக்க வேண்டும்" என்றும் "மதத்திற்கு ஆபத்து சமயத்துக்கு ஆபத்து, கடவுள்களுக்கு ஆபத்து" என்றும் கூப்பாடு போட்டு மதத்தையும் கடவுளையும் காப்பாற்ற வென்று அவைகளிடம் "வக்காலத்துப்பெற்று" மற்ற மக்கள் துணையைக் கோரும் வீரர்கள் யாராவது இதுவரை இந்த ஆபாசங்களை விலக்க முன் வந்தார்களா என்றும் கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றி எந்த ஆஸ்திக சிகாமணிகளுக்கும் ஒரு சிறிதும் கவலையில்லாவிட்டாலும் பிள்ளையார் சதுர்த்தி என்கின்ற உற்சவம் என்றைக்கு என்பதில் மாத்திரம் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் குறைவில்லை என்று சொல்வதோடு, இந்த ஆபாசங்களையெல்லாம் ஒழிக்க முயற்சிக்காமல் சும்மா இருந்து கொண்டும், இவ்வாபாசங்களை பிரசங்கம் பண்ணிக்கொண்டும் இருந்துவிட்டு இதை எடுத்துச் சொல்லுபவர்களை நாஸ்திகர்கள் என்று சொல்லி விடுவதாலேயே எந்தக் கடவுளையும் எந்தச் சமயத்தையும் காப்பாற்றிவிட முடியாதென்றே சொல்லுவோம். இனி அடுத்த கடவுளைப்பற்றிக் கவனிப்போம்.

2. சுப்பிரமணியனது பிறப்பு.

விஸ்வாமித்திரன் சுப்பிரமணியனது பிறப்பைப்பற்றி ராமனுக்குக் கூறியது:—

1. சிவபெருமான் உமாதேவியைத் திருக்கலியாணம் செய்து, மோகங்கொண்டு அவளுடன் 100 தேவ வருஷம் (மனித வருஷத்தில் பல யுகம்) புணர்ந்துகொண்டிருந்தனர். அவ்வளவு காலம் கழிந்தும் பார்வதி கர்ப்பம் அடையவில்லை; அதுகண்டு நான்முகன் முதலிய தேவர்கள் சிவனிடத்தில் வந்து, "இவ்வளவு காலம் புணர்ந்த உம்முடைய தேஜஸ்வரூபிய விந்து வெளிப்படுமானால் உலகம் பொறுக்கமாட்டாது. உம்முடைய விந்துவை தயவுசெய்து விடாமல் நிறுத்திக் கொள்ளும்" என்று வேண்டவும், அதற்கிசைந்த சிவன் தனது விந்துவை மற்றபடி யார் தரிப்பது? எங்கு விடுவது? என்று கேட்க, தேவர்கள் பூமியில் விடும்படி சொல்ல, அந்தப் படியே சிவன் பூமியின் மீது விட்டு விட்டார். பூமி அதை தாங்கமாட்டாமல் பூமி முழுதும் சொதிகொண்டு எழ, தேவர்கள் அந்த வீரியத்தை பூமி தரிக்க முடியாது எனக் கருதி

அக்கினியிடம் சென்று வேண்ட, அக்கினி வாயுவின் உதவியால் அவ்வீரியத்திற்குள் பிரவேசித்து பிரமதேவன் கட்டளைப்படி அதை கங்கையில் கொண்டு சேர்த்து, அவ்வீரியத்தைப் பெற்று ஒரு குழந்தை பெற வேண்டுமென்று கங்கையை வேண்ட, கங்கையும் அதற்குச் சம்மதித்து அவ்வீரியத்தைப் பெற, அவ்வீரியமானது கங்கை முழுவதும் பரவி நிறைந்துவிட, கங்கை அதை தாங்கமாட்டாமல் மறுபடியும் அக்கினியை வேண்ட, அக்கினி மனமிரங்கி கங்கையை நோக்கி "ஏ கங்கையே! நீ அடைந்த சிவனின் வீரியத்தை தாங்கமுடியாவிட்டால் பனிமலை அருகில் விட்டுவிடு" என்று சொல்ல, கங்கையும் அவ்வாறே அவ்வீரியத்தை பனிமலையின் அருகில் விட, அங்கு அது குழந்தையாகத் தோன்ற, அதை இந்திரன் பார்த்து அக்குழந்தைக்கு பால் கொடுத்து வளர்க்கக் கிருத்திகா தேவிகளை ஏவ அவர்கள் அதற்கு பால் கொடுத்து வளர்த்து வரலானார்கள். பல இடத்தில் சிவனது வீரியம் ஸ்கலிதமானதன் பலனாக அக்குழந்தை உற்பத்தியானதால் அக்குழந்தைக்கு ஸ்கந்தன் என்றும், கிருத்திகா தேவிகள் ஆறு பேர்களுடைய பால் சாப்பிட்டதால் கார்த்திகேயன் என்றும், மேற்கண்ட ஆறு பேரின் முலையினால் ஆறு முகம் கொண்டு ஏககாலத்தில் பால் குடித்ததால் ஷண்முகன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வரலாறு வால்மீகி ராமாயணத்தில் "சிவன் பார்வதியை புணர்ந்தது" என்று தலைப்பெயர் கொண்ட 36-வது சருக்கத்திலும் "குமாரசாமி உற்பத்தி" என்கின்ற 37-வது சருக்கத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவது வரலாறு, தேவர்கள் சிவனிடம் சென்று அசுரர்களை அழிப்பதற்கு தகுந்த சக்தி கொண்ட ஒரு குழந்தையை பெற்றுத்தரவேண்டுமென்று வேண்ட, சிவன் அருள்கூர்ந்து தனது ஐந்து முகங்களுடன் மற்றும் ஒரு முகத்தையும் சேர்த்துக்கொண்டு தோன்ற, அவ்வாறு முகங்களில் உள்ள நெற்றிக்கண் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் வெளியாக, அப்பொறிகளைக் கண்டு தேவர்களும் மனிதர்களும் நடுநடுங்கிப் பரமனை வேண்ட, பரமன் அப்பொறிகளை கங்கையில் விடும்படி சொல்ல, அவர்கள் அப்படியே செய்ய, கங்கை அது தாங்கமாட்டாமல் அவைகளைக் கொண்டு சரவணத்தில் செலுத்த, அங்கு ஆறு குழந்தை

கள் தோன்ற, அந்த ஆறு குழந்தைகளையும் கிர்த்திகைப் பெண்கள் அறுவர்களும் பால் கொடுத்து வளர்த்து வந்தார்கள். பிறகு சிவன் பெண்ஜாதியாகிய பார்வதிதேவி இந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்துக் கட்டி அணைத்து முத்தமிட்டுப் பாலூட்டுகையில் அவ்வாறு குழந்தைகளும் ஆறு முகம் பன்னிரண்டு கைகளும் கொண்ட ஒரே குழந்தையாக ஆகிவிட்டது. இதற்கு ஆறுமுகமுடையதால் ஆறுமுகன் என்றும், கங்கையாறு ஏந்திச் சென்றதால் காங்கேயன் என்றும், சரவணப் பொய்கையில் தோன்றியதால் சரவணபவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இது கந்தபுராணத்திலும் முருகன் கதையிலும் உள்ளது.

குறிப்பு:—சுப்பிரமணியன் பிறப்புக்கு மேல்கண்டபடி இரண்டு கதைகள் காணப்பட்டாலும் கந்தபுராணத்தின் கதைப்படி பார்த்தாலுமே வால்மீகி ராமாயணத்தில் விஸ்வாமித்திரர் ராமருக்குச் சொன்னதாகச் சொல்லப்படும் மேல்கண்ட கதைதான் உறுதியாகின்றது. ஏனெனில் கந்தபுராணத்திலும் பார்வதியானவள் தன் மூலியமாய் பிள்ளை பெறுவதை தடுத்ததற்காக தேவர்கள் மீது கோபித்து தேவர்களை "பிள்ளையில்லாமல் போகக்கடவது" என்று சபிக்கிறாள் என்று காணப்படுகின்றது. சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி வெளியாகி அதிலிருந்து பிள்ளை உண்டாகியிருக்கும் பட்சத்தில் பார்வதிக்கு தேவர்களிடத்தில் கோபம் உண்டாகக் காரணம் ஏற்பட நியாயம் இல்லை. இந்தக் கோபம் உண்டாவதற்குக் காரணம், வால்மீகி ராமாயணத்தில் சொல்வதுபோல், அதாவது 100 தேவ வருஷம் சிவன் பார்வதியைப் புணர்ந்து கடைசியாக வீரியம் வெளிப்பட்டு கருத்தரிக்கும் சமயத்தில் தேவர்கள் குறுக்கிட்டு சிவனை தனது வீரியத்தை பார்வதி கர்ப்பத்திற்குள் விடாமல் நிறுத்திக்கொள்ளும்படி வேண்டினதால் சிவன் அதை எடுத்துக்கொண்டதற்கு பார்வதி கோபித்து வீரியம் ஸ்கலிதமாகும் சமயத்தில் கொடுமை செய்ததற்காக அவர்களைச் சபித்து, அதாவது தன்னைப்போலவே தேவர்களுடைய பெண்சாதிகள் எல்லோரும் பிள்ளையில்லாமல் மலடிகளாக வேண்டுமென்று சபித்ததாகக் காணப்படுவது நியாயமாக இருக்கின்றது.

அன்றியும் பார்வதி தனது கர்ப்பத்தில் விழவேண்டிய வீரியத்தை பூமி பெற்றுக்கொண்டதால் பூமியையும் பார்வதி தனது சக்களத்திபோல் பாவித்து அவளையும்

ஹிந்து மதத்தில் பெண்கள் நிலைமை.

(ஒரு தயாளர் எழுதுவது)

ஹிந்துக்களுக்குப் பின் வாரிசு, பாத்திய உரிமை, சொத்துரிமை, மணம், விவாகம், மரணசாசனம், ஏனைய குடும்ப சம்பந்த நிகழ்வுகள் ஆகிய விஷயங்களில் அவர்களுடைய சொந்த சட்டமாக (சிறிது புதிய மாறுதலுடன் மட்டும்) அனுசரிக்கப்பட்டு வருகிற "ஹிந்து லா" என்கின்ற சட்ட நூலிலிருந்து சிற்சில பாகங்கள் இங்கு வெளியிடப் பட்டிருக்கின்றன. "ஹிந்து லா"வுக்கு ஆதாரமாய் எடுத்துக்கொள்ளப்பட்ட 3 முக்கிய ஆதாரங்கள் என்னவென்றால்:(1) சுருதி—இது தெய்வம் என்று சொல்லப்படுவதன் வார்த்தைகள்; (2) ஸ்மிருதி—இது பண்டைய ஞானிகள் என்பவர்கள் பரம்பரையாய்க் கையாண்டு வந்த முறைகள்; (3) பழக்க வழக்கங்கள்.

(பூமியையும்) பல பேர் ஆளவேண்டுமென்று சபித்ததாகவும், அதனாலேயே பூமிக்கு அடிக்கடி அரசர்கள் மாறுகிறார்கள் என்றும் வால்மீகியில் காணப்படுகின்றதும் பொருத்தமாயிருக்கின்றது.

கந்தபுராணமோ மேல்கண்ட சிவன் 100 வருஷம் புணர்ந்த விஷயம் ஒன்றைத் தவிர மற்றவைகளையெல்லாம் ஒப்புக்கொள்ளுகின்றது.

ஆகவே, சுப்பிரமணியன் என்றும், சண்முகன் என்றும் கார்த்திகேயன் என்றும், ஸ்கந்தன் என்றும் சொல்லப்படும் சாமியானது மேல்கண்டமாதிரி ஒரு பிறப்பு வளர்ப்புக்கு உள்பட்டது என்பது வைணவப் புராணங்களிலும் சைவப் புராணங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றபடி இந்த சுப்பிரமணியனுடைய கடவுள் தன்மையையும் செய்கைகளையும் வேறு தலைப்பின் கீழ் விவரிக்கலாம்.

முதலில் "ஹிந்து லா"வை ஹிந்துப்பண்டிதர்களின் உதவியினால் இங்கிலீஷ்கார நீதிபதிகள் செலுத்தி வந்தார்கள். 1868-ம் ஆண்டில் கோர்ட்டுகளின் உத்தியோக தோரணை பெரியர்களாக நியமிக்கப்பட்டு வந்த பண்டித வர்க்கத்தார் நீக்கி விடப்பட்டனர். பிற்பாடு கோர்ட்டார், தாமே சட்டத்தை விவரிக்கும் வேலையை வைத்துக்கொண்டனர்.

கீழ் காணும் பகுதிகளிலிருந்தே நமது "ஹிந்து லா" என்பதானது நமது பெண்களை நீங்காத அடிமைத் தனத்திலேயே எப்படி ஆழ்த்தி வைத்திருக்கின்றதென்பதை வாசகர்கள் தாமே அறிந்து கொள்ளலாம், ஹிந்துலாவின் குறிப்பிட்ட சில பகுதிகளாவன:

மணம் செய்வது பற்றி.

1. ஒரு ஹிந்து ஒரு மனைவியையாவது பல மனைவிகளையாவது உயிருடன் உடையவனாயிருப்பினும், இன்னும் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணம் செய்து கொள்ளலாம். (S. 348)

2. ஒரு பெண் ஒரு புருஷனைத் தவிர வேறு ஒரு மனிதனைக் கலியாணம் செய்துகொள்ளக்கூடாது (S. 349)

புருஷன் மரணமாய்விட்டபோதும் கூட பெண்கள் மறுபடி மணம் செய்துகொள்ள சுதந்தரமுடையவர்களாயில்லை, ஆனால் அத்தடை சட்டசபையால் (1856-ம் ஆண்டின் XV சட்டத்தினால்) நீக்கப்பட்டுள்ளது.

3. ஹிந்து மணம், பேருக்கு மாத்திரம் தெய்வீக காரியம் என்று கருதப்படினும் அது யதார்த்தத்தில் அப்படி காணப்படவில்லை; காரியத்திலும் அப்படித்தோன்றவில்லை. அத்தகைய மணத்தை ஒரு கணவன் எச்சமயத்திலும் ரத்து செய்து விடலாம். ஆனால் அவனது மனைவி மட்டும் அப்படிச் செய்ய முடியாது. இது விபரீதமாகவே உள்ளது. ஆகவே ஹிந்து கலியாணத்தினுடைய பயன்கள் பெண் வர்க்கத்திற்கு மிகவும் கொடுமையுள்ளதாகவே உள்ளன.

குறிப்பு:—ஆனால், வீட்டில் ஒற்றுமையின்மையும் அன்பு இன்மையும் ஏற்படுமாயின் புருஷனை விட்டு விலக மனைவிக்கு மாத்திரம் ஏன் உரிமை இல்லை?

4. பௌதாயன் (சட்டத்திற்கு அதிபதியான ஒரு ரிஷி) புருஷனானவன் மணவிலக்கு செய்துகொள்ளுவதை ஆதரிக்கிறார்; அவன் 'கலியாணம் செய்துகொண்ட 10 ஆண்டுவரை குழந்தைகள் பெறாத ஒரு மனைவியை விட்டுவிடட்டும்; வெறும் பெண் குழந்தைகளை மாத்திரம் பெறும் ஒருத்தியைப் பன்னிரெண்டாம் ஆண்டில் விட்டு விடட்டும்; கல்யாணம் செய்துகொண்ட 15 வருஷம்வரை, எந்த மனைவியிடம் பிறக்கும் குழந்தைகள் யாவும் இறந்து போய்விடுகின்றனவோ, அவளை விட்டு விடட்டும்.'

பெண்களின் அந்தஸ்துபற்றி.

1. நாரதர் (ஸ்மிருதிக்கு கர்த்தாவான ரிஷி) கூறுகிறார்: 'எவனொருவன் வாங்கின கடனையோ, பொருளையோ திரும்பக் கொடுக்கவில்லையோ அவன், கடன் கொடுத்தவனுடைய வீட்டில் ஒரு அடிமையாகவாவது ஒரு வேலைக்காரனாகவாவது ஒரு ஸ்திரீயாகவாவது, ஒரு நாலு கால் மிருகமாகவாவது பிறப்பான்.'

2. மனு (ஹிந்து சட்டம் செய்தவராய், வேத முறைகளை முதன் முதலில் வெளியிட்டவராய், இன்றைக்கும் மக்கள் யாவரும் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்களைச் செய்தவராய் உள்ளவர்) கூறுவது:- ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு அடிமை ஆகியோர் சொத்துக்களை வைத்திருக்க யோக்கியதை அற்றவர்களாவார்கள். அவர்கள் என்ன சம்பாதித்தாலும் அதெல்லாம் அவர்கள் எவர்களுக்கு உரிமையுடையவர்களோ அவர்களைச் சேரும்.

3. பௌதாயனர் கூறுவது.- எந்த மனிதனும் பெண்களுக்கு இரவலோ, கடனோ கொடுக்கக்கூடாது; அடிமைகட்கும், குழந்தைகட்கும் கூட ஒன்றும் இரவல் தரக்கூடாது.

4. மத விதிகள் கூறும் நூல்களில் ஒன்றாகிய ராமாயணம் உரைப்பது: 'தப்பட்டைகள், பயிரிடுபவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் மிருகங்கள், பெண்கள் ஆகிய இவர்கள் எல்லாம் கடுமையான முறையினால் ஒடுக்கி வைக்கப்படவேண்டும்' (சுந்தரகாண்டம் 5)

5. மனு கூறுகிறார்: பகலும் இரவும் மாதர்கள் அவர்களுடைய சொந்தக்காரர்களை அண்டியே இருக்கும்படியாகச் செய்யப்பட வேண்டும். பெண்களைக் குழந்தைப் பருவத்தில் தகப்பன் மாரும், வாலிப காலத்தில் புருஷன் மாரும், வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகளும் காப்பாற்றுகிறார்கள்- ஒரு பெண் ஆனவள் ஒரு போதும் சுயேச்சையாயிருக்கத் தகுதி யுடையவளல்ல. அவ

ளுடைய வாழ்வு பூராவும் நல்லவர்களாகவோ, கெட்டவர்களா கவோ, அலட்சியக்காரர்களாகவோ இருக்கும்படியான மற்றவர்களு டைய இரக்கத்தினால் வாழ்பவளாகவே இருக்கவேண்டும், ஏனெ னில் பெண்கள் அவ்வளவு அற்பஜீவர்களாகவே இருக்கிறார்கள்.

6. உத்தம ஸ்திரீக்கு மனுவுரைக்கும் யோக்கியதாம்சமென்ன வெனில், அவளுடைய தகப்பன் அவளை எவனுக்குக் கொடுத்தி ருக்கின்றானோ அவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் அவ னையே அவள் மரியாதை செய்யட்டும்.........ஒரு புருஷன் துர்நடத்தையுடையவனாயினும், இன்னொருமாதினிடம் அன்பு கொண்டவனாயினும், நல்ல தன்மைகளில்லாதவனாயினும், அவ னைத் தெய்வம் போலவே கருதுகிறவள் தான் புண்ணிய ஸ்திரீ யாவாள். (அத்தியாயம் V. 154)

7. மனு, ஒருமாதானவள், எவ்வளவு நல்லவளாகவும், உத் தமமானவளாகவும் இருப்பினும், அவள் தன் கணவனுடைய குணங்களையுடையவளாகத்தான் இருப்பாள். மேலும் அவர் சொல்லுவது: ஒரு மங்கையானவள்தான் மணம் செய்து கொண்ட ஒரு புருஷன் என்ன குணங்களையுடையவனாயிருக்கின்றானோ அந்தகுணங்களையே அவளும் அடைவாள். எதுபோலவெனில் கடலில் போய்க் கலக்கிற ஆற்றைப்போல். (அத். IX 22.)

8. பௌதாயனர் உரைப்பது: 'மாதர்கள் அறிவுகளே இல் லாதவர்கள், அவர்கள் சொத்துரிமை கொள்ளவும் யோக்கியதை யற்றவர்கள்.'

ஸ்ரீதனப் பொருள்பற்றி.

ஸ்ரீதன சட்டமானது மிகவும் கொடுமையாகவே இரு க்கின்றது. அது 'ஹிந்துலா'வில் இன்னும் முடிவுக்கு வந்தில் லாத ஒரு செய்தியாகும். அவ்விஷயமாய் வக்கீல்மார்கள் அடிக் கடி, தம்மாலான வரையில் விடாப்பிடியாய் வாது செய்கின்றனர் (டாக்டர் கோர்—S.)

மத சுதந்தரம் பற்றி.

மாதர்களது மத சுதந்தரம் பற்றி மனு கூறுவது:— தன் கணவனுக்கன்றிப் பூசையையோ, வேண்டுதலையோ, வி ரதத்தையோ அனுஷ்டிக்க கூடாது. ஏனென்றால் ஒரு மனைவி

தன் கணவனுக்கு சிசுருஷை செய்தாலேயே அவள் சுவர்க்கத்தை அடைகிறாள். (அத். V. 155.)

குறிப்பு:— மத அனுஷ்டான சுதந்தரமானது, மக்கள் வர்க்கத்தின் ஒவ்வொருவருக்கும், காற்று, வெளிச்சம், நீர், ஆகாரம் முதலிய அத்தியாவசியமான பொதுப்பட்ட பொருள் போல உளதாயிருக்க, அதுகூட ஹிந்து மாதர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பெண்ணை யார் கலியாணம் செய்து கொடுப்பது.

ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கும் உரிமையானது கீழ் கூறப்படுகிறது: முதலாவது தகப்பன், இரண்டாவது தகப்பனுடைய தகப்பன், மூன்றாவது சகோதரன், நான்காவது தகப்பன் வழியிலுள்ள ஏனைய சொந்தக்காரர்கள்; ஐந்தாவது தாயார்.

ஆகவே தாயானவள் தனது மகளைக் கலியாணம் செய்து கொடுக்கும் விஷயத்தில் சரியான உரிமையற்றவளாயிருக்கிறாள்.

பரிபாலனம் பற்றி.

1. ஒரு விதவையைப் பரிபாலனம் செய்வது, இறந்த புருஷனுடைய சொத்தில் வாய்க்கும் உரிமையைப் பொறுத்ததாகாது. ஜீவனாம்ச காரியமானது ஒரு கோர்ட்டுத் தீர்ப்பினாலோ, ஒரு ஒப்பந்தத்தினாலோதான் நிர்ணயிக்கப்படவேண்டும். ஆகையினாலே ஒரு கைம்பெண்ணுக்கு ஜீவனாம்சம் பெறுவதுகூட நிச்சயமற்ற செயலாகவே இருக்கிறது. (S. 475.)

2. கைம்பெண்ணாயிருக்கப்பட்டவள் தன் கணவனுடைய சொத்தில் ஒரு சிறிது மட்டுமே அடைகிறாள். அப்பொருளுக்குக் 'கைம்பெண் சொத்து' என்று பெயருமாகும். அவள் தான் உரிமையாய்ப் பெற்ற பொருளிலிருந்து வரும் வருமான பாகத்திற்கு மட்டும்தான் பாத்தியம் கொண்டாடலாம். அவள் பெற்ற சொத்தை தனக்கு உசிதம் போல விநியோகித்துக்கொள்ள அதிகாரம் உடையவளாயில்லை. (S. 42/3.)

அவளுடைய மரணத்துக்குப்பின், சொத்தானது அவளுடைய வார்சுக்குப்போகாமல், அவளுடைய புருஷனுடைய

வார்சுகாரர்கட்கே (சொத்துரிமையாளர்கட்கே) போகிறது (S. 142, 144.)

3. ஒரு ஹிந்து தனக்கு மனைவியல்லாத பிறமாதிடம் பிறந்த ஆண் குழந்தைகளைப் பரிபாலிக்கவும் கடமைப்பட்டிருக்கிறான். (S. 457/—A.)

ஆனால், அவ்வகையில் பிறக்கும் பெண் பிள்ளைகளுக்கும் பரிபாலனம் உண்டு என்று ஹிந்துச்சட்டத்தில் கூறவில்லை; ஆயினும், அந்தகைய பெண் குழந்தைகள் குற்ற நடவடிக்கை விதிநூல் (S. 458,) செக்ஷன் 488 பிரகாரம் தகப்பனிடமிருந்து பரிபாலனத்துக்கு உரிமைபெற இடம் பெற்றிருக்கிறார்கள்.

சொத்துரிமை பற்றி

1. ஹிந்துவாயிருக்கப்பட்ட ஒரு தகப்பன், தன் ஆண் மக்கள், மனைவி, ஏனைய பாத்தியக்காரர் ஆகியோரது உரிமைக்கு விரோதமாய் அவர்கள் ஒன்றுமே அடையமுடியாதபடி செய்து, தன் சொத்தை விநியோகிப்பதை ஒருவரும் தடுக்க முடியாது. அந்த சொத்தானது யாரேனும் ஒரு அந்நியருக்குக் கொடுக்கப்பட்டதென்பதே போதும் (S. 306/2 V.)

2, விதிகளில் கூறப்பட்டிருந்தாலொழிய, ஒருபெண்ணானவள் எந்த சொத்துக்கும் பாத்தியதை உடையவளாக மாட்டாள். (S. 50)

3. சாதாரண விதிப்படி எச்சந்தர்ப்பத்திலும், மாதர்கள் பாத்திய முறையில், பூராஜீவேஜிதத்தைப் பெறுவதில்லை. ஆனால் அவர்கள் அச்சொத்தை பிறர் யாருக்கேனும் விநியோகமாய் மாற்றிவிட்டத்தான் பாத்தியமுண்டு (S. 323 V.) ஆனால், ஒரு ஆண் சொத்துக்கு வார்சுகாரனாக ஏற்படின் அவன்தான் அப்படி அடைந்த பூராஜீவேஜியையும்தானே சொந்தமாக்கிக் கொள்ளலாம். (S. 141)

ஒரு மைனருக்குக் கார்டியனாயிருப்பது பற்றி.

1. கீழ்ச் சொல்லப்பட்ட ஆசாமிகள் கீழ்ச் சொல்லப்பட்ட முறைப்படியே இயற்கையான மைனர் கார்டியன்மாராகப் பாவிக்கப்படுகிறார்கள். (1) தகப்பன் (2) தாயார் (3) தகப்பன் வழி சொந்தக்காரர் (4) தாய் வழி சொந்தக்காரர் (S. 430.)

இவ்வண்ணம் தகப்பனானவன், தாயாரைக் காட்டிலும் ஒரு மைனர் குழந்தை கார்டியனாகவிட அதிக உரிமை பெறுகிறான். ஆனால் அக்குழந்தை எவ்வளவு இளமையாக விருப்பினும் அதன் தாயார் கார்டியனாக இருக்க முடியாது. சில சமயம் அநேக கொடுமைமிக்க தகப்பன்மார் குழந்தைகளை அவற்றிற்குப் பால் தரும் தாய்மாரிடமிருந்து அதன் க்ஷேமத்திற்கு வழியில்லாமல் பிரித்துவிடலாம்.

ஆனால், கோர்ட்டார், குழந்தையின் வயது, படிப்பு, சந்தர்ப்பங்களின் தன்மை இவற்றையெல்லாம் ஆலோசித்துத் தம் புத்தியை உபயோகித்துக் குழந்தையின் க்ஷேமத்தையெண்ணி, அது தாயிடம் ஒட்டியிருக்கும் காலம் வரையில், அதை அவளுடைய ஆதரவிலும், பாதுகாப்பிலும் விடுகிறார்கள்.

முகம்மதிய சட்டத்தை இச்சந்தர்ப்பத்தில் ஒப்பிடுங்கள், அச்சட்டம் இங்கு அதிக இரக்கமுடையதாயும், அதிக யோசனை பெற்றதாயும் தோன்றும். அது மைனர் குழந்தைகளின் பரிபாலனத்தை அவர்களின் க்ஷேமத்திற்காக, அவர்களுடைய தாயாரிடமே விடுகின்றது. ஏனென்றால், தகப்பன்மாரிலும் தாய்மார் இயற்கையினாலேயே முதலாவது கார்டியன்மாராக ஆகின்றனரென்பதே. முகம்மதிய லா பிரகாரம், தாயானவள் தன் ஆண்குழந்தைகளினுடைய கார்டியனாக அவை 7 வது வயது ஆகும்வரை இருக்க வேண்டும். அவள், பெண் குழந்தைகளினுடைய கார்டியனாக, பெண்கள் பதினைந்தாம் வயதை அடையும் வரையில் அல்லது பருவமடையும் வரை இருக்க வேண்டும். அந்த தாயானவள் தன் புருஷனால் விவாக ரத்து செய்யப்பட்டவளாயிருந்த போதிலும் இந்த உரிமையை இழந்து விடுவதில்லை.

ஸ்வீகாரம் செய்வதுபற்றி.

1. ஒரு மனைவியோ ஒரு விதவையோ தான் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுங் காரியம் பற்றித் தன் கணவனிடமிருந்து உறுதியாக அபிப்ராயம் பெற்றிருந்தாலன்றி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள உரிமை கிடையாது (S. 367)

2. தத்து எடுத்துக்கொள்ளுகின்ற மனிதன் கலியாணம் செய்துகொள்ளாதவனாயிருந்தாலும் சரி, தாரமிழந்தவனாயினும் சரி, அல்லது, அவனது மனைவி கர்ப்பமாக இருந்தாலும் சரி,

அறிவைக் கெடுத்தவர்கள் ஆச்சாரியார்களே.

நமது கடவுள்கள்.

(கைவல்ய சாமியார்)

எங்களுடைய கற்பனையாலோ குதர்க்கத்தாலோ இஷ்டம்போலோ இதை எழுதவில்லை. அறிவினால் நாமெல்லாரும் ஒன்றுபட்டு, காலதேச வர்த்தமானங்களால் நேரிடும் பேதங்களெல்லாம் நீங்கிப் பெரும் பயன் எல்லோருக்குமுண்டாக வேண்டுமென்றே இதை எழுதி வருகிறோம். அதுவும் நம் இந்துமத சாஸ்திரங்களிலுள்ள வேறுபாடுகளை யெல்லாம் விட்டொழிப்பதற்காகவே எந்த ஏடுகளை நாம் சாஸ்திரமென்று போற்றுகின்றோமோ அவைகளை ஆதாரமாகக்கொண்டேதான் எழுதி வருகிறோம்.

மனிதனிடம் அறிவுதான் ஒற்றுமைக்குப் மிகப்பெரிய சாதனம். சென்னையில் ஒரு மூலையிலுள்ள மாணாக்கனுக்கும், ஐரோப்பாவின் முடக்கு ஒன்றிலுள்ள படிப்பாளிக்கும் உள்ள சம்மந்தம் அதிகம்; பெரிய சாஸ்திரிக்கும், இவரு

அந்த கர்ப்பவதி தன் புருஷன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதை எதிர்ப்பினும் சரியே. அதையெல்லாம், அவன் தத்தெடுத்துக் கொள்ளுங்கால் லக்ஷியம் செய்யவேண்டியதில்லை (டாக்டர் கோர், S. 571)

ஒரு ஆண் தானாக தன் மகனை ஸ்வீகாரமாக கொடுத்துவிடலாம். தாயானவள் அதற்கு ஆக்ஷேபித்தாலும், ஹிந்து லாவின் முன்னிலையில் தகப்பன் தன் மகனைப் பிறருக்கு ஸ்வீகாரமாய்க் கொடுத்திட உரிமை உண்டு. (டாக்டர் கோர் S. 674)

டைய பக்கத்து வீட்டில் அக்ஷரம் தெரியாமல் குடியிருப்பவனுக்கும் உள்ள சம்மந்தம் குறைவு. நம் தேசத்தில் இந்த அறிவின் தீபங்கள் எத்தனை மங்கலாகவும் இடை விட்டும் கொடுமையாகவும் எரிகின்றன என்பதை யோசிக்கும்போது உலகத்தார் அனைவரும் இக்காலத்தில் நாடிச்செல்லும் "அறிவினால் ஒற்றுமைப்படுதல்" என்றபாதை நமக்கெவ்வளவு கஷ்டமென்பது தெளிவாகும். அறிவின் முறையைச் சீர்திருத்தும் பொருட்டு இடையிடையே இந்நாட்டில் சிலகாரியங்கள் செய்யப்படுகின்றன. எனினும் அது பரவாமல் செய்யப்படும் தடைகள் எப்போதும் போல் வலிதானதாகவே இருக்கின்றன. அதில் ஒரு தடையைப்பற்றிக் கீழே குறிப்பிடுகிறேன்.

காலையில் சூரியனைக் கும்பிட்டு உபாதானமெடுத்து, உலகத்தை ஏமாற்றிப் பிழைக்கவே கற்பிக்கப்பட்ட சாஸ்திரங்களை படித்துப் பிழைத்த சாஸ்திரிகளின் பிள்ளைகளெல்லாம் இப்பொழுது இங்கிலீஷ் ஓட்டல்களில் உண்ணாததெல்லாம் உண்டு, உடுக்காததெல்லாம் உடுத்தி, செய்யாததெல்லாம் செய்து "பறையனை"க் கும்பிட்டுப் பிழைத்துக் கொண்டுவரும் இக்காலத்திலேயே, இவர்கள் சிற்றப்பன், பெரியப்பன், மாமன், மைத்துனமார்களான பண்டிதர்கள் திருப்பதி சமஸ்கிருத காலேஜில் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு வியாகரணம் (இலக்கணம்) சொல்லிக் கொடுக்கமாட்டார்களாம். இந்தக் கொடுமையான அசம்பாவிதம் நமது சென்னையைத்தவிர வேறெந்த தேசத்திலேனும் உண்டென்று நினைக்கிறீர்களா? அறிவு என்பது மனிதனுக்கெல்லாம் பொதுவென்பதை உலகமெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறது. நமது மாகாணத்தில் மட்டும் அக்கொள்கை செல்லும்படி ஆவதில்லை. இதற்கெல்லாம் காரணம் மதமென்றும், சாஸ்திரமென்றும், அதன் ஆச்சாரிகளின் உபதேசங்களென்றும், இத்தனைக்கும் கர்த்தாக்களான நம் கடவுள்களின் நியமனமென்றும் சொல்லுகிறார்கள். "எல்லா தேசக்கடவுளும், அறிவாளிகளும் ஒத்துக்கொள்ளாததை நாம் கடவுள் நியமனமென்று சொல்லலாமா" என்று சொல்லிவிட்டால் அப்பொழுதே அவன் நாஸ்திகனாய் விட்டான்! "மற்றெல்லாமதங்களும் பொது அறிவைத் தடுக்கவில்லையே" என்று கேட்டாலே போதும். உடனே அவன் மதத்துவேஷியாகி விடுகிறான்! "மற்ற மத ஆச்சாரிகள் பொது அறிவில் குறுக்கிடுவதில்லையே" என்றாலே போதும். அவன் ஆச்சாரிகளைத் தூஷிக்கிறவனாகி விடுகிறான். "நம் சாஸ்திரங்கள் ஒன்றோ

டொன்று சண்டை போடுகிறதே; ஒன்றுக்கொன்று விரோதமாகவும் முரணாகவும் இருக்கிறதே" என்றாலே போதும். சாஸ்திரம் படிக்காதவன்! சாஸ்திர விஸ்வாசமில்லாதவன்! ஆராய்ச்சியில்லாதவன்! ஆகிவிடுகிறான்.

"புத்தியைப் பிரமிக்கச் செய்யத்தக்க பற்பலவிதமான வியாக்கியானங்கள் செய்யும் சாமர்த்தியம் புலவர்களின் பெருமைக்கும், இன்பத்திற்குமேயன்றி ஆத்மாவின் முத்திக்குப் பயன்படாது" என்பதுபோல மதாச்சாரிகள் எழுதியிருக்கும் புஸ்தகங்களும், வியாக்கியானங்களும் மதத்துவேஷம் நிறைந்தும், வேறுபாடு மிகுந்தும், தங்கள் கொள்கைகளையே நிலைநிறுத்த முன்னுக்குப் பின்வரும் வித்தியாசங்களைக் கருதாமலும் எழுதப்பட்டிருப்பதினால் மதாச்சாரிகளின் பெருமைக்கும், ஆடம்பரத்திற்கும், அவர்களது போக போக்கியத்திற்கும் அவர்களின் சிஷ்யர்கள் வயிற்றுப் பிழைப்பிற்கு மாத்திரமே பிரயோஜனப்பட்டதேயல்லாமல் அனைசன சமூகங்களுக்கு மதத்தின் உண்மைகள் தெரியாமலும், மதத்துவேஷம் மேலிட்டு பொது அறிவின் தன்மைகளை உணர முடியாமலும் செய்து விட்டன.

நம் தெய்வங்கள்.

நம் தெய்வங்கள் என்று சொல்லப்படுபவைகளில் சிவனும், விஷ்ணுவும் பெரிய தெய்வங்கள்; இவர்கள் அதர்மத்தை அழித்து தர்மத்தை உலகத்தில் உண்டாக்க அவதரித்தார்களென்று நாம் பெரிய கிரந்தமென்று கொண்டாடப்பட்டவைகளிலெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. "மனிதனது நித்தியமான ஆத்மஸ்வரூபமே நம் மதத்திற்குப் பிரமாணம் என்றும், அது வற்புறுத்தும் நல்லொழுக்கத்திற்கு மனிதனது அத்யாத்ம நிச்சயின்மயத் தன்மையே ஆதாரம் என்றும், இது தான் நம் மதத்தின் உத்தம நிலையான ஞான தத்துவம் என்றும், ஆனால் சாதாரணமாயுள்ள மக்கள் பெரும்பான்மையோருக்கு இது கஷ்ட சாத்தியமான படியால் அவர்கள் சுலபமாய் தெரிந்துகொண்டு பின்பற்றக் கூடிய ஒரு மகா புருஷனது அனுஷ்டானமும் திவ்விய சரித்திரமும் அவசியம்" என்றும் சொல்லப்படும் ஞாய சமாதானங்கள் எங்களுக்கும் தெரியும். உலகத்திலுள்ள நல்லொழுக்கம், தர்மம், ஞானம் பக்தி என்கிற இவை எல்லாம் அவரவர்கள் நினைக்கும் மகா புருஷனிடமே இருந்து வரவேண்டுமென்பதற்குக் கூட நம் மூர்த்திகளில் யாரையேனும் மதக் கிரந்தங்களில் அவர்களின் நடத்தை ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறதா? இல்லை. அவை

களில் சில மகாமேதாவிகளான ஆசாரிய புருஷர்கள் எழுதி யவைகளே ஆபாசமாக இருக்கிறதென்பதைக் காட்ட சில வற்றைக் கீழே குறிப்பிடுகிறேன்.

வேத சுருதிகளையும் உபநிஷத்துக்களையும் திரட்டி எழுதப்பட்டதே பிரமசூத்திரம். இதைச்செய்தவர் வேத வியாசர். இதற்கு அநேகர்கள் அர்த்தமெழுதி யிருக்கிறார் கள். ஒருவர் அர்த்தத்தைப்போன்று மற்றொருவர் அர்த்த மிருக்காது. ஒவ்வொரு அர்த்தமும் ஒவ்வொரு மதப்பிரிவின் சித்தாந்தம். ஆனால் பிரம சூத்திரமென்பது ஒரே ஏடுதான். இந்துமதப் பிரிவின் ஒரு பகுதிக்கு ஆச்சாரியான மத்வாச்சா ரியார் செய்திருக்கும் பிரம சூத்திர பாஷியத்தின் முகவுரை யில் அடியில் காணும் விஷயம் சொல்லப்பட்டிருப்பதாக நாம் இப்பொழுது படிக்கிறோம். (மத்வாச்சாரி யென்பவர் 'விஷ்ணுவின் அம்சம்' வாயுபகவானே அவதாரி அனுமா னாகவே விளங்குகிறவர்.)

''உண்மையான மதத்தைப் பின்பற்றி உலகத்தில் எல் லோரும் மோட்சத்தை அடையத் தகுந்தவர்களானார்கள். அதைக் கண்டு கவலை கொண்டு மகாவிஷ்ணு சங்கரனைப் பார்த்து 'மகா புருஷனே! ருத்திர மூர்த்தியே! இக்கெடுதி யைத் தடுக்க வேண்டும். ஜனங்களின் புத்தியைக் கவர்ந்து மயக்கி மோகிக்கச் செய்து மோட்சத்தை அடையும் மார்க் கத்திலிருந்து அவர்களைத் தடுக்கும்படியான சாஸ்திரங்க ளைச் செய்ய லோகத்தில் அவதாரம் செய்து அவைகளை எல்லோருக்கும் உபதேசம் செய்' என்றார். அப்படியே சங் கரன் சங்கராச்சாரியாக அவதரித்து அத்வைத மதத்தை உப தேசித்து அதைக் கைக்கொண்டவர்களை நரகத்திற்கு அனு ப்பினார்'' என்று சொல்லப்படுகிறது.

ஆச்சாரி மடங்களில் நடக்கும் உருட்டுப் புரட்டெல்லாம் கூட உண்மையாக நடக்கும் விஷயத்திலுள்ள ஒன்றையும் கீழே சொல்லுகிறேன். நமது தென்னாட்டிலுள்ள த்வைத மத மடமொன்றில் ஒரு ஆச்சாரி இருந்தார் அவர் தம் மதத்தை நிலை நிறுத்துவதிலும், புறமதங்களைக் கண்டிப்ப திலும் மகா நிபுணர். இவரை ஜெயித்து அத்வைத மதத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தால் மிகுந்த லாபமுண்டென்று அக்காலத்திலுள்ள அத்வைத பண்டிதர்கள் நினைத்து, அவர் பூசை செய்துகொண்டிருக்கும் சமயம் எல்லாரும் உள்ளே நுழைந்து பூசை செய்யும் ஆச்சாரியாரைப் பார்த்து ''இப்

பொழுது சத்தியமாகச் சொல்லும், அத்வைதம் உண்மையா த்வைதம் உண்மையா'' வென்றார்கள். ஆச்சாரியார் கொஞ்ச மேனும் தயங்காமல் கைகளை தூக்கிக்கொண்டு ''நான் பூசை செய்யும் இந்தத் தெய்வத்தின் மேல் ஆணை வைத்துச் சொல் லுகிறேன்; அத்வைதமே சத்தியம், த்வைதமே அசத்தியம்'' என்று பிரமாணம் செய்து விட்டார். பார்த்தார்கள் சிஷ்யர் கள், குருவைக் கோபித்துத் திட்டி மடத்தைவிட்டு ஓடிப் போகச் சொன்னார்கள். குரு அந்தச் சிஷ்யர்களைப்பார்த்து ''மடையர்களே! உங்களுக்கு வயிறு வெடிக்கத் தின்பதும், முரட்டுத்தனமாகப் பேசுவதும்தான் தெரியும். நீதி, யுக்தி, உபாயம் முதலிய யாதொன்றும் தெரியாது. நான் சொல்லு வதைக் கேளுங்கள். "நமது மதத்தில் ஜீவகோடிகள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது எப்பொழு தும் முக்தியையே அனுபவிக்கிறவர்களான முக்தி யோக்யர் கள்; எப்பொழுதும் நரகத்தையே அனுபவிக்கவேண்டிய தமோயோக்யர்கள்; எப்பொழுதும் இந்த ஸம்சாரக்கடலிலே யே நீர்க்குமிழி அடித்துக்கொண்டிருக்கவேண்டியவர்களான நித்ய ஸம்சாரிகள் என்று மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டி ருக்கிறார்கள். நமது மதத்தைத்தவிர மற்ற மதங்களைப் பின்பற்றுகிறவர்களெல்லோரும் தமோ யோக்யர்களே. நமது மதத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் முக்தி யோக்யர்கள், ''அத்வைத மதத்தில் பிறந்து நித்யநரகத்தை அடையவேண் டிய மகாபாவிகளை நாம் முக்தி யோக்யர்களாகச் செய்யத் தகுமா? அது ஈஸ்வரனுடைய நியமனத்திற்கு விரோதமல் லவா! நான் அவர்களுடன் வாதம் செய்து த்வைதமே சத்திய மென்று சித்தாந்தம் செய்து விட்டால் அவர்கள் தங்களுடைய மதத்தை விட்டு நமது மதத்திலல்லவா வந்து விடுவார்கள், அப்பொழுது முக்திக்கல்லவா யோக்யராய் விடுவார்கள். அந்தப்பாவத்தை நான் செய்யலாமா? நம் மதத்தைக் காப்பா ற்றவும், மத விரோதிகளைக் கொடுமையாகத் தண்டிக்கவும் நான் செய்த பொய்ச் சத்தியம் பாவமல்ல; பாவமாகவிருந்தால் பெருமாள் காரியமானதால் மன்னித்து விடுவார்'' என்று சொன்னார்.

சலந்திர சூரனைப் பரமசிவன் ஜெயிக்க முடியாமல் அவனது பெண்ஜாதியின் கற்பைக்கெடுக்கப் பார்வதியை மகாவிஷ்ணுவினிடமனுப்ப, அதற்கிணங்கிய மகாவிஷ்ணு அவன் பெண்ஜாதியான பிருந்தையின் கற்பை அழித்தார். அவளும் விஷ்ணுவைக் கடுமையாகச் சபித்தாள் என்னும்

கதை ஆனந்த ராமாயணத்திலும், கந்தபுராணத்திலும் காணப்படுகிறது.

திரிபுர அசுரர்கள் நல்வழியில் நடந்து எல்லையற்ற புண்ணியத்தைச் செய்து விட்டபடியால் பரமசிவன் நாரதனை அவர்கள் பெண்ஜாதிகளிடமனுப்பி அவர்கள் கற்பைக் கெடுக்க மார்க்கத்தைச் செய்தார் என்னும் கதை வாயு புராணத்தில் காணப்படுகிறது.

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் புத்த அவதாரம் ஒன்றென்றும், ஜைனமத கூடஸ்தரான ரிஷப தேவரை விஷ்ணுவின் அம்சாவதாரமென்றும் ஒருகாலத்தில் ஒப்புக் கொண்டு, பிற்காலத்தில் மதத்துவேஷத்தால் அவர்கள் மோசடியான மதத்தை உபதேசம் செய்ய வந்தவர்களென்று ஆச்சாரிகள் புராணங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். பிரம சூத்திரத்திற்குப் பாஷியம் செய்த சங்கரர், ராமானுஜாச்சாரியார், மத்வாச்சாரியார், நீலகண்ட சிவாச்சாரியார் இவர்கள் ஜைன பௌத்த மதங்களைத் தங்கள் பாஷியங்களில் கண்டித்திருக்கிறார்கள். இவர்களும் விஷ்ணுவினுடையவும் சிவனுடையவும் அவதாரங்களாம். ஜைன பௌத்த மதங்களுடைய ஆதி புருஷர்களும் மகாவிஷ்ணுவினுடைய அவதாரங்களென்றும் இவர்களும், வியாசர், பிருகு, ராமர், கபிலர், பதஞ்சலி முதலியவர்களைப்போல் சத்தியஸ்வரூபிகள் என்றும் ஒத்துக்கொள்கையில் எந்த உபதேசங்கள் சரி? ஆதி மதங்கள் சுத்தமாக இருந்தன, பிறகு சீரழிந்தனவென்றால் அதே கதியாகத்தான் நம் இதிகாச புராணங்களும் வந்திருக்கக்கூடாதா? தற்காலத்தில் அவைகளும் ஜன சமூகங்களை சீரழிக்க வந்த பேயென்று 'குடி அரசு' சொல்வதில் குற்றமென்ன?

சங்கரருடைய அவதாரமென்று சொல்லப்படும் சங்கராச்சாரியின் சங்கரபாஷியம், விஷ்ணுவின் அவதாரமாகிய கபில பகவான் உபதேசித்த ஸாங்கிய மதத்தைக் கண்டிக்கிறதே. அதனால் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மதவிஷயமான அபிப்பிராய பேதமுண்டோ? விஷ்ணுவின் அம்சமான வியாசரே விஷ்ணுவின் அம்சமான கபிலர்உபதேசித்த சாங்கியத்தைக் கண்டித்தால் கிருஷ்ணன் கீதையில் ஸாங்கிய யோகமே ஞானயோகமென்றும், அதே கர்மயோகமென்றும், அவ்விரண்டில் ஒன்றைக் கைப்பற்றினவன் இரண்டின் பயனை அடைகிறான் என்றும் சொல்லியிருப்

பதற்குப் பதிலென்ன? ஆதிசேஷ அவதாரமான பதஞ்சலியால் உபதேசிக்கப்பட்ட யோகசாஸ்திரத்தைச் சங்கர பாஷ்யம் கண்டிக்கிறது. தன் பக்தர்களில் சிரேஷ்டமாய் விளங்கிய அவருக்கு ஆனந்த நடனம் செய்த பரமசிவன் அவருக்குப் பொய்யான மதத்தை உபதேசித்திருப்பாரா? இதில் எது சரி, எது தப்பு? வியாசருடைய முக்கிய சிஷ்யரான ஜைமினி மகரிஷி உபதேசித்த மீமாம்ஸா சாஸ்திரத்தை வியாசர் ஏன் கண்டிக்கிறார்? இவர் தன் சிஷ்யனுக்கு உண்மையைச் சொல்லிக் கொடுக்கவில்லையா? இத்தனை விஷயங்களையும் இன்னும் அநேக விஷயங்களையும் படித்தும் கவனித்தும் பார்க்கையில் வித்வ சாமர்த்தியத்தால் பலவித வியாக்யானங்கள் செய்து, அதாவது வெள்ளைக்கார ராஜ்யங்களில் பொருளுக்காக பலவிதமான சாயங்களைப் பல மாதிரியாய் புதிது புதிதாய் வேடிக்கையும், சௌகரியமும், பிரபையும் அமைந்தவைகளாகச் செய்து விற்றுக் காலக்ஷேபம் செய்யும் வித்தை போலவும், வக்கீல்கள் என்று ஒரு கூட்டம் தோன்றி உலகமறிய மனதாரவே மெய்யைப் பொய்யென்றும், பொய்யை மெய்யென்றும் சமயத்திற்குத் தக்கபடி பேசி வயிறு வளர்ப்பது போலவும் நம் மதத்தையும் சுயநலக்காரர்கள் சின்னா பின்னப்படுத்திப் பொது அறிவைக் கெடுத்து விட்டார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ. இவையனைத்தும் ஒழிந்தால் தான் ஜனசமூகம் பொது அறிவைப் பெற முடியுமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

இராமாயணம் அயோத்தியா காண்டத்தில் பௌத்தனும் நாஸ்திகனும் ஒன்றே என்று ராமர் கண்டித்திருக்கிறார். "பௌத்த மதத்துக்கு பின்னா ராமாயணக் கதை?" என்னும் ஒரு கேள்வியே ராமாயணக்கதையின் பெருமைக்குப் போதுமானதாகவிருக்கும். ஆழ்வார்களும், நால்வர்களும் தங்களுடைய பாசுரங்களில் சமணரென்றும், சாக்கியரென்றும் ஜைன பௌத்த மதங்களைக் கண்டித்திருக்கிறார்கள். அவர்களில் எல்லோரும் இந்த மதங்கள் உற்பத்தியானதற்குப் பின் பிறந்தவர்களா? அதற்கு முன் இவர்கள் மதமிருந்ததில்லையா? கலியுகத்தின் ஆரம்பத்தில் பிறந்த நம்மாழ்வாரும் அதற்கு முந்தின யுகங்களில் பிறந்த சில ஆழ்வார்களும் ஜைன பௌத்த மதங்களை அறிந்தும் கண்டுமிருக்க முடியுமா? இதற்கெல்லாம் சமாதானம் நீங்களே ஆலோசியுங்கள்.

நூறாண்டு வாழ்வதெப்படி?

(தோழர் வை. இராஜரத்தினம் அவர்கள் "பியர்ஸன் வீக்லி"யிலிருந்து மொழிபெயர்த்து "தமிழ் முரசு" பத்திரிகையில் வெளியிடப்பட்டது)

நமது வாழ்நாள் 70 ஆண்டு என்றும், தேகவலிமை பெற்றவர்கள் சிலர் 80 ஆண்டு ஜீவித்திருக்கலாமெனவும் சொல்கின்றனர். ஆனால் இதனில் அவர்கள் தொல்லை ஒழிந்த பாட்டைக் காணோம். என்ன விசாரம் அதுவே விசாரமாய் அவர்கள் அவதிப்படுகின்றனர் எனவும் பைபிளில் கூறப்பட்டுள்ளது.

பைபிள் வேதாந்திகள் மனிதனது வயது 70 என வரையறுத்துக் கூறுகின்றனர். இதைப் பெரும்பாலான மக்கள் நம்பி தமது வாழ்க்கைப் பாரம் அன்று ஒழியுமெனவும் நம்பியிருக்கின்றனர். இவ்வரையறையைக் கடந்து வாழ்ந்து வரும் மக்கள் இன்றும் பலரிருக்கின்றனர். முதுமையின் அந்தரங்கந் தானென்னவோ! வயோதிக வாழ்க்கை மக்கட்கு பயன் நல்குமா? இன்று முதுமையில் சிறந்து விளங்கும் பேரறிஞர் பர்னாட்ஷா தாம் இயற்றிய "மெதுசேலாவிற்குத் திரும்பு" எனும் புத்தகத்தில் கண்ட உண்மைக்கிலக்காக வாழ்பவர் என்றே சொல்லலாம். முதுமை பற்றியதாயினும் தன்னுடலெங்கணும் இளமைக்குருதி ஊடுருவிப் பாய்கிறது. வாலிப வன்மை இடம் பெற்று நிற்கிறது எனப் பெற்றிக்கொள்கிறார். மரக்கறி உணவின் மாட்சியும், புகை பிடியாததின்மையும், குடி ஒழித்திட சித்தமுமே இதற்குக் காரணமெனக் கூறுகிறார்.

பர்னாட்ஷா வயது 80.

மக்கட்குக் கல்லறைகளைத் தேடிக்கொடுப்பது அவர்கள் வாயேயென பர்னாட்ஷா பன்முறை பகன்றிருக்கிறார். எண்பதாண்டை எட்டிப் பார்க்கும் அன்னாரின் மதியுரைகள் இங்கு கவனிக்கற்பாலதாகும்.

வைத்தியரை அணுகாதே.

"வைத்தியரை ஒருபோதும் நாடாதே, மாமிசத்தை நண்ணாதே, போதைச் சரக்கை அறவே விடு; உன் கூட்டாளிகளாகவேயன்றி மற்ற காரியங்களில் டாக்டர்களை எப்பொழுதும் விலக்கி வை" என்பதே அவர் மதிமொழியின் சாரம். அப்சாவளியும் இதற்குத் துணைபுரியுமென்கிறார். தாமும் நீடித்த ஆயுள் பெற்ற பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் என்கிறார்.

"மெதுசேலாவிற்குத் திரும்பு" எனும் தனது நூலின் முகவுரையில் 'வாணாளை நீளாளாக்க முடியும்' எனவும், வாழ்க்கைபால் வெறுப்புற்று வாழ்வோர் உயிர்தமை மாய்த்துக்கொள்வதே சிறந்தது எனவும் கூறுகிறார்.

மற்றோர் அறிஞராம் வில்லியம் கிரீன் என்பாரின் போதனை மேற்கூறியவற்றிற்கு முற்றிலும் மாறாகவிருக்கின்றது. தான் தொண்ணூறாண்டு வாழ்வதற்குரித்தாயது உயிர்த் தவளைகளின் உணவேயென உரைக்கின்றார். தான் சிறுவனாயிருந்த நாள் ஓர் குடியானவன் உயிர்த் தவளைகளைத் தின்னும் வித்தையைக் கற்றுக்கொடுத்தான் என்கிறார்.

"நான் அவைகளை உயிருடனேயே விழுங்குகின்றேன். அப்படிச்செய்த காலத்தில் நோயென்பதே யென்னை அணுகாதிருந்தது. எளிய வாழ்க்கையும், தூய உடையும், வைகறைத் துயில் எழுதலும் நீடித்த ஆயுட்கு அடிகோலிகளெனல் வெற்றுரைகள் தான்" என அவர் கூறுகிறார். இவ்வுரைகளில் அர்த்தமில்லையென அறையமுடியுமா? ஆனால் உயிர்த்தவளைகளை உண்டு நீடித்து வாழ முன்வர மக்கள் பெரிதும் நிதானிப்பர். உடலுரம் மற்றும் குருதி குறைந்தவர்களும் நுரையீரலை வெறுக்கின்றனர். விஞ்ஞான விற்பன்னர்கள் அவர்களுக்கென உருசியளிக்கும் உணவினையே உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. நூறாண்டு நிறைவுறப்பெற்ற திருமதி ட்ரம்மாண்ட் எனும் மாது தனது நீண்ட ஆயுட்குச் சில சாதாரண வழிகளையே கூறுகிறார்.

"ஆனால், எல்லாவற்றிலும் சிறந்தது குடியின்மையே" என எச்சரிக்கிறார்.

வில்பட்லர் வயது 131.

14 கொள்ளுப்பேரன்மார் கொண்ட பாட்டி.

14 கொள்ளுப்பேரன்களை பாங்குடன் பெற்ற பாட்டி யார்? அவர் தம் குலசரிதத்தை நீங்களறிவீரோ? அப்பாட்டிதான் விக்

டோரியா மகாராணி பட்டம் தரிக்க நாலாண்டுகள் முன்பிறந்த ட்ரம்மண்ட். இவர்தானின்று உயிருடனிருக்கும் அவள் குடும்பத்தினரில் கடைசி. அவரின் ஆறு குழந்தைகளில் மூன்று இன்றும் ஜீவித்திருக்கின்றன. அவளுக்கு பனிரெண்டு பேரன்களுமுண்டு. ட்ரம்மண்ட் பாட்டியார் தனது யாக்கையின் பயனை எய்திவிட்டனர்

ஸ்ரீமதி ஆன்ஸ்டான்ஸால் வயது 104

மிஸஸ் ஆன் ஸ்டான்சால் என்னும் மற்றோர் பாட்டியைப்பற்றிச்சிறிது கேளுங்கள். ஈஸ்டர் நாட்களில் இப்பாட்டி தனது நூற்றுநான்காவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். குட்டை உருவம் கொண்ட ஓர் கிழவியிவள். கராடையுடுத்திக் கருப்புத் தொப்பியணிந்த காரிகையிவள், நடுங்காது கைலாகு கொடுக்கும் ஓர் கிழவி. இக்கிழவியினிடம் இரைந்து நீ உரையாடவேண்டிய அவசியமில்லை. கண்ணாடியின்றே கண் தெளிவுறப் பார்க்கும் தன்மையினள். சில வாண்டுகள் முன்புவரை தனது வீட்டைச் செப்பனிட்டு காத்து வந்தாள். தனது நூற்றாண்டுவிழாவின் போதுதான் தனது விடுமுறை தினத்தைக் கண்டாள். அன்றுதான் அவள் நவீன உருக்கொண்டு முதன்முதலாக மோட்டாரிலும் ஆகாயவிமானத்திலும் சவாரி செய்தாள். சினிமா படக்காட்சிக்கும் சென்றாள். அவள் அந்தரங்கம் என்ன? எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டவள்; உழைப்பின் சிறப்பை ஓர்ந்து நோக்குபவள்; போதுமென்றமனமே பொன்செயு மருந்து எனக் கண்டவள். உணவின் உயர்வை விடுத்தவர்கள் பலர். நூற்றுக்கதிகமான ஆண்டு வாழ்பவர்கள் கொண்ட வாழ்க்கைத் தத்துவத்தையும் விஞ்ஞான முறையையும் வெறுப்பவர்கள் பலர். உலகில் சில பகுதிகளே நீடிய ஆயுளுக்குத் துணைபுரிகிறது. நூற்றுக்கதிகமான ஆயுளுடையவர்களை பிரதேச வாரியாகக் கவனிக்கும் பூகோள சாஸ்திரிகள் நீடித்த ஆயுளுடன் வாழும் மக்கள் பலரை ஷெட்லாண்ட்ஸ் தீவுகளிலேயே காண்கிறார்கள். மவுண்ட் தொண்மாலையின் மேல் வாழ் மக்களின் ஆயுள் விருத்திக்குக் காரணம் அவர்கள் வாழும் உயர்ந்த பிரதேசமெனவே அறியப்படுகிறது.

மனத்திருப்தியே மக்களின் வாழ்க்கை நீடிப்புக்கு முக்கிய காரணமென உங்களில் வெகுசிலரே கொள்ளாமலிருக்கலாம். மனநிம்மதியற்ற மக்களைப் பார்த்து 'தற்கொலைபுரிந்து கொள்ளாதீர்கள்' என வைத்தியர்கள் எச்சரிக்கை செய்வதுண்டு. சென்ற ஆண்டு தனது 112-ம் பிராயத்தில் பிராணன் நீத்த காதரின் பிளங்கெட்

அம்மையாரின் பொன்மொழிகளைக் கவனியுங்கள். "இறக்கும் வரை நான் எளிய வாழ்வைக் கைக்கொண்டு மனித கூட்டக் காரியங்களில் ஆர்வமிகுந்த பணியேற்றுக் கொண்டிருந்தேன்"

ஸ்ரீமதி மேரி டாவன் போர்ட் வயது 111.

தமது 68-ம் வயதில் மூன்றாந்தாரம் கல்யாணஞ் செய்துகொண்டாள்.

கரோலின் மேரியட்டைப் பற்றி வெகு சிலவே நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனால் அவள் இன்னும் உடலுரனுடனும் உற்சாகத்துடனுமே வசித்துவருவாள். கிராய்டன் ஆஸ்பத்திரியில் தான் சிகிச்சையிலிருக்கும்போது அவள் தனது 109-ஆண்டு தினத்தைக் கொண்டாடினாள். தானே தன் தசை நோயை நீக்கிக்கொண்டதாக அவள் கருதினாள். ஆஸ்பத்திரியில் நுழைந்ததுமே தனக்கு ஒவ்வொரு காலை வேளையிலும் ஒரு கோப்பை தேநீர் தரும்படி வேண்டிக்கொண்டாள். ஆஸ்பத்திரி அதிகாரிகளும் அதற்குச் சம்மதித்தனர். அதுவே தனது நோயை போக்கியதாக அவள் கூறுகிறாள். தினமொன்று இரண்டு பைண்டு வீதம் அவ்வாண்டில் நாலுகாலன் தேநீர் அருந்தியிருக்கிறாள். பிரிட்டனின் நூறாண்டு நிறைவுபெற்ற மாந்தர் தொகை இதர வெளி நாட்டின் தொகைக்கு இணையாகா. யூதுல்லஸ் எனும் பிரான்சு கிராமமே இத்தகைய மனிதர் பலரைக் கொண்டு உலகத்தில் தலைசிறந்து காண்கிறது எனச் சொல்லப்படுகிறது. நீடித்த ஆயுள் பெற்ற மக்கள் அக்கிராமத்தில் 330 பேரிருக்கின்றனர். அவர்களின் நூறாண்டு நிறைவிழா வாற்றிய பதினான்குபேரும் சேர்ந்துளர். வைத்திய நூலில் 103 ஆண்டு நிறைவுபெற்று வாழ்ந்தவர் டாக்டர் அலக்ஸாண்டர் எனும் ஒருவர் பாரிஸில் இருந்தாரெனச் சொல்லப்படுகிறது. "நூறாண்டு வாழ்வதெப்படி" என ஓர் நூலை அவர் வெளியிட்டிருக்கிறார்.

ஜான்ஸ்டேடன் வயது 102.

விக்டோரியா மகாராணியார் சிம்மாசனமேற ஐந்தாண்டு முன்பவதரித்த இவ்வறிஞர் தினமும் நீடிய தூரம் உலாவிச் செல்வதே தனது ஆயுள் விருத்திக்கு காரணமெனச் சொல்கிறார்; 'மீனூண் விரும்பேல்' என அவர் கூறுகிறார். நல்லதென நினைப்பதையே நீ உண் எனவும் கூறுகிறார். ஒவ்வொரு சாப்பாட்டுடனும் நான் முட்டையும் வெண்ணெயும் உண்கின்றேன். சிறிது இறைச்சியும் மரக்கறியும் 'ஒயினும்' சேர்த்துக் கொள்கி

றேன்; பழக்காலங்களில் அன்று பழுத்த அருங்கனி வர்க்கங்களையும் பெரிதும் விரும்புகின்றேன். நம்மில் பலர் மீறான் கொள்கின்றனர். 35ல் இறக்கிறவன் அகாலமரணத்திற்காளாகிறான் எனவே சொல்லவேண்டியிருக்கிறது. நீடித்த வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆழ்ந்து சுவாசிப்பதாகும் (Deep Breathing) தேகாப்பியாசமும் இதற்குறு துணையாகும். தீர்க்காயுளுக்கு நாட்டு வாழ்க்கை நல்துணை நல்குவதாகும் கிராம நிர்மலவாயுவே இதற்குக் காரணமெனலாம்.

முழு உருப்பெறுவதற்கும் ஒவ்வொரு பிராணியும் எடுத்துக் கொள்ளும் கால அளவைப்போன்று ஐந்து மடங்கு காலத்திற்கு அவைகள் வாழ்ந்திருக்கின்றன. முழுவுரு முற்றுப் பெறுவது இருபது அல்லது இருபத்திரண்டாமாண்டெனின் ஒரு மனிதனின் கிரமபிராயத்தை நூறு அல்லது நூற்றுப் பத்திற்குள்ளாக் கலாம்.

நாஸி பழமனிதர்.

தீர்க்க ஆயுளிற்கு ஜர்மனியின் சீதோஷ்ணநிலையும் ஒருவாறு துணைபுரிகின்றது. நாஸி ஜனநாயக ஆட்சியில் இன்று நூறாண்டு நிறைவுபெற்ற மக்கள் 124 பேர் இருக்கின்றனர். அவற்றில் எண்பத்தொருவர் பெண்களாவார். ஒருவள் மாத்திரமே மணமாகா மங்கையாகவே யிருக்கின்றனள். ஏனையோர் பெரும் குடும்பங்களின் தாயாய்த் திகழ்கின்றனர். இப்பழ மனிதரில் பெரும்பான்மையோர் குடியானவர்களே. எல்லோரும் பீர் குடிக்கின்றனர்; புகை பிடிக்கின்றனர். 'ஒபின்' அருந்துகின்றனர், மாமிசமருந்தாமையும் அமிதமான குடியின்மையுமே தங்கள் நீடித்த ஆயுளிற்கு அடிகோலியுள்ளதெனக் கூறுகின்றனர். மற்றோர், வாழ்க்கைப்பயனை நன்கனுபவிப்பதும் நோயற்று வாழ்வதுமாயிருக்கின்றனர். பலர் உடல் திறத்திற்கு உறுதுணையளிப்பது நங்கையைக் கூடி இயற்கையோடியைந்த இன்வாழ்வு வாழ்தலே எனக்கூறுகின்றனர். மணவாழ்க்கையும் உழைப்புமே நீடித்த ஆயுளிற்கு உதவியளிக்கிறதென்கின்றனர்.

பச்சை வெங்காய மருந்தி பாங்குடன் நூறாண்டும் இருபதும் வாழ்ந்த ஓர் மெக்ஸிகோ மங்கையை நீர் அறியீரோ! நெட்டில்ஸ் (Nettles) என்னும் தழையை எண்ணெயிலிட்டு வதக்கி உண்ணின் உடல் வளனுண்டு என போலாவில் இன்றும் வாழ்கின்ற 103 ஆண்டுமனிதன் கூறுகிறான். அவன் மதுசாரமருந்தியதுமில்லை;

புகை பிடித்ததுமில்லை. புளித்த ஒயின் நஞ்சினும் கொடியது என்கிறான்.

உலகத்தில் உயரிய ஆயுள் பெற்றவன் யார்? ஸாரோ ஆகா எனும் துருக்கி மனிதன் 160 ஆண்டு வாழ்ந்திருந்தான். இன்று அவனது நண்பன் அகமெது பே என்பான் 135 ஆண்டு நிறைவுற்று பழம்பெரு மனிதன் எனப்பேர் வாங்கி விளங்குகிறான். ஆனால் தனது நண்பனைப்போன்று 160 ஆண்டு வயது என அவன் சொல்லிக்கொள்ள முடியுமா? அகமெதுவே ஆவியில் நீராடுவதை (Turkish bath) நம்பவில்லை.

உலகத்திலேயே அதிக வயதான

ஸாரோ ஆகா வயது 160.

விமானத்தில் பறக்கிறார்.

ஆனால் குளிர்ந்த நீராடுதலே நலமெனக் கொண்டுள்ளார். திறந்த வெளிகளில் உலவச்செல்லுங்கால் ஊற்றுநீர் அருந்துவது வழக்கம். நான் ஒருபொழுதும் உடல் நலன் குன்றப்பெறவில்லை. இரண்டுதரமே ஜலதோஷம் பெற்றேன், எவ்வண்ணம் அதைப் போக்கினேன்? "வேண்டியமட்டும் குளிர் நீர் அருந்தியே" எனச் சொல்கிறார். உணவில் நான் அக்கறை கொள்வதில்லை. எது வாயினும் உண்பது தான். இறைச்சி, மச்சம், மரக்கறி பழம் எல் லாம் உண்பேன். புளித்த பால்பானத்தையே விடாது விரும்பி யருந்தி வந்தேன் எனவும் கூறுகிறார்.

துருக்கி வயோதிகர்களைப்பற்றி ஒரு விஷயம் என்னவெனின் அவர்கள் பலதாரம் மணம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் மனைவிமார்கள் ஒருவரும் நீடித்து வாழவில்லை. ஸாரோ ஆகா 12, 13 பெண்களை பெண்டாட்டியாகக் கொண்டார். ஒரு வரும் அவர் இறக்கும் தருவாயிலிருந்ததில்லை. அகமெது நால்வரை மணந்ததாகச் சொல்கிறார். அவர்களிலும் ஒருவருமின்றில்லை. அகமதிற்கு அருங்குழந்தைகள் அனந்தமிருந்தன. ஆனால் அவர் களனைவரும் அமர்க்களத்தில் ஆவி விடுத்து மாய்க்கப்பட்டனர். அவனுக்கு பல பேரன்மாரிருக்கின்றனர். இத்தகைய பழ மக்க ளெல்லோரும் வறுமை யெனும் வன்கண்ணிற் கிலக்கானவர்கள் தான். வாழ்க்கைச் சுழலில் பெரும் அல்லல் பெற்றவர்கள்தான். எனினும் பல்லாண்டு பாரினில் உயிர் வாழ்ந்திருந்தனர். உலக குபேரன்களில் ஜே. டி. ராக்பெல்லரும் ஒருவன். அவன் இவ்

வாண்டே தனது 97-வது பிராயப் பூர்த்தி விழா நடத்தினான். அவனது ஆகாரம் பெரியதும் தண்ணீருமாகும்.

உலக குபேரர் ராக்பெல்லர் வயது 97.

சில கிழ மனிதர்கள் ருஷ்யாவிலே யழைக்கப்பட்டு சோவியத் இரசாயன ஆராய்ச்சிச் சாலைக்கு கொண்டுபோகப்பட்டனர். அவர்கள் 180 ஆண்டுவரை ஜீவித்திருக்க இயலுமென விஞ்ஞானி லேஸரவ் ஆராய்ந்தறிந்து கூறுகிறார். இன்று அவனது ஆராய்ச்சிச் சாலையில் 113 பிராயத்தினர் பலர் இருக்கின்றனர். 100 ஆண்டிற்குட்பட்டவரில் சில உருசியா வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டமக்களுமிருக்கின்றனர்.

ஸ்டீபன் சால்டர் வயது 101

அவரில் 80 ஆண்டுவரை குடியைத் தன்னிடை விடாப் பழக்கமாகக்கொண்டு வாழ்ந்துவந்த 92 பிராயம் நிறைப் பெற்ற ஒருவனிருக்கின்றான்.

உலக முதியோரின் வாழ்க்கைச் சரிதம்இவ்வண்ணம் இலங்குகிறது. நீங்களும் அவர்களுடன் போட்டியிட்டு நீடித்த ஆயுளைப் பெறலாம். பல முதியோர்கள் பெரும் ருசிகரமான தங்கள் வாழ்க்கைச் சரிதத்தைப் பின் சந்ததியார்களுக் களிக்காமலே மண்ணில் மறைந்துவிட்டனர்!

ஆரியர் தெய்வத்தன்மை.

இராமாயணத்தின் பெண் தர்மம்.

1. தாடகையைக் கொன்றது.
2. அயோமுகியை மூக்கு, காது, முலையை அறுத்தது.
3. சூர்ப்பனகை மூக்கை அறுத்தது.
4. சீதையை கர்ப்பத்துடன் காட்டில் விட்டு வந்தது.

ஈ. வெ. ரா.

சந்திரன்.

(எம். சிங்காரவேலு எழுதியது.)

நமது பூமியைவிடச் சந்திரன் நான்கு பங்கு சிறிது. பூமியில் நிலமும் கற்களும் இருப்பது போல் சந்திரனிலும் உண்டு. போட்டோகிராப் (Photograph) பில் சந்திரனில் எங்கும் எரிமலை இருப்பதாகத் தோன்றுகிறது. ஆகாயத்தில் சென்று (Etna) என்ற எரிமலையைப் போட்டோகிராப் எடுத்துப்பார்த்தால் எவ்விதமாக எரிமலை தோன்றுமோ அதேமாதிரி சந்திரனைப் போட்டோகிராப் எடுத்துப்பார்த்ததில் நமது பூமியிலுள்ள எரிமலையைப் போல் தோன்றும். சந்திரனில் தோன்றும் எரிமலைகள் ஒருவன் தேகம் முழுமையும் கொப்பளங்கள் கிளம்பியமாதிரி காணப்படுகின்றன.

சந்திரனில் காற்றாகிலும், மேகமாகிலும் காணமுடியவில்லை

காற்று சந்திரனில் ஒரு காலத்தில் இருந்திருந்தாலும் பூமியைவிட சந்திரன் சிறிதாகையால் அதற்கும் கவரும் சக்தி (Gravitation) பூமியைவிடக் குறைந்து இருக்கின்றபடியால் தனது சுழலும் விசையால் அதன்காற்று அதனைவிட்டு மேல் பரந்துபோய் இருக்கவேண்டும். நீராவியும் அதேமாதிரியே சந்திரனை விட்டுப்போய் இருக்கவேண்டும். நமது பூமியின் காற்றும், நீராவியும் பூமியின் இழுக்கும் சக்தி (Gravitation) குறையக் குறைய பூமிமேல் தங்க முடியாமல் ஒரு காலத்தில் வெளிப்பரந்துபோவது நிச்சயம். அந்தக் காலத்தில் மனிதப் பூண்டு வசிப்பது கூடாது. ஆனால் அது வெகு காலம் பிடிக்குமாதலால் சுமார் 100-கோடி வருஷமானாலும் ஆகும். நாமும் நமது சந்ததியாரும் இனிவரும் வெகுகாலத்திற்கு பயப்படவேண்டியதில்லை! நாளைக்கு உலகமுடிவென்று புரளிசெய்வோரை பயித்தியகார ஆஸ்பத்திரிக்குத்தான் (Lunatic Asylum) அனுப்ப வேண்டும். உலகம் உண்டாகி சுமார் 200-கோடி வருஷம் இருக்கலாம். இனியும் 200-கோடி வருஷம் இருக்குமாம். மனிதன் உலகில் பரிணமித்து சுமார் 5, 10 லட்சம் வருஷம் தான் இருக்கிலாம். உல

இல் இன்று மனிதன் தவழுகின்றான். இனி யௌவனப் பருவமடைய கோடிவருஷகாலமாகும். அதற்குப்பின் உலகத்திற்குத் தள்ளாமை காலமிருக்கின்றது. இன்னும் பல கோடி வருஷம் மனிதன் உலகில் தங்கி வாழ இருக்கின்றது. அவன் முடிவைப்பற்றி யோசிக்கவாவது, அல்லது பயப்படவாவது வெகு காலமிருக்கின்றது. அப்படிப் பயப்பட்டாலும் பிரயோஜனமில்லை. இந்தச் சிறு சாண் காலத்தில் (This Little Span of Life) ஒருவன் மடிவது நிச்சயம். அதனைப்பற்றி சிந்திப்பதாலும், பயப்படுவதாலும் யாது பயன்? அதுபோலவே உலகில்வாழும்மனிதகுலம்ஒருகாலத்தில் மடிந்துபோவதுநிச்சயம். அதனைப்பற்றி பயப்படுவதால் என்னலாபம்? நமதுமரணநிச்சயத்தைக் குறித்துப் பயப்பட்டாலும் எதுவும் கைகூடி வரப்போவதில்லை. அது போல நமது மனித குலத்தின் மரணத்தைக் குறித்து விசாரப்படுவதில் பிரயோஜனமில்லை. ஸ்பைநோஸா (Spinoza) என்றபெரியார் கூறியதுபோல் (Wise man never thinks of death, but of life) விவேகி வாழ்வைப் பற்றி யோசிப்பானே யொழிய மரணத்தைப்பற்றிக் கருதான். இன்னொரு பெரியார் (Kingdom Clifford) கிங்டம் கிளிப்பர்ட் இது சம்பந்தமாகக் கூறுகின்றார். (We are alive today let us shake hands together and see how we can helpeaehother) இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். நாம் கலந்து கை குலுக்கி எவ்விதம் ஒருவருக்கொருவர் உதவி புரிவோமென்பதைப் பார்ப்போம்.

சந்திரன் பூமியிலிருந்து பிரிந்து போயிருக்கவேண்டுமென்று வான நூலோரும் (Astronomers) பூகர்ப்பநூலோரும் (Geologists) யூகிக்கின்றார்கள். எவ்விதமாகப் பிரிந்திருக்கலாமென்பதை இரண்டுவிதமாக உத்தேசிக்கின்றார்கள்.

பூமியும் சந்திரனும் ஒன்றாகக் குழம்பிய ரூபமாக (Liquid Farm) இருந்த காலையில் இம்மாபெரும் உருவம் சுழன்றுகொண்டிருக்கையில் ஏதோவோர் பெரிய சண்டமாருதத்தால் அதிலிருந்து ஒரு துண்டு பிரிந்திருக்க வேண்டும். அந்தத் துண்டு தான் நமது சந்திரனாக நமது பூமியைவிட்டு

தாரஞாரமாகப் பிரிந்து போய்க்கொண்டிருக்கின்றதென்பார் சிலர். மற்றுஞ்சில மெஞ்ஞானிகள் பிரபல வான நூலாசிரியராகிய (Sit Jrmes Jeans) சொல்லும் உத்தேசத்தை ஆதரிக்கின்றனர். ஜீன்ஸ் சொல்வதாவது:—குழம்பி இருக்கும் வஸ்து சுற்றுகையில் சுற்றும் விசையால் உருளைவடிவத்திலிருந்து சற்று நீண்டு அந்த நீண்ட உருவத்திலிருந்து உடுக்கை உருவத்தை அடைந்து அதிலிருந்து பிரிந்து இரட்டை உலகங்களாக ஒன்றையொன்று சுற்றுமென்று பரீட்சை மூலமாகக் காட்டுகின்றார். இதைப்போலவே பூமியும் சந்திரனும் ஒன்றாகக் குழம்பிய உருவங்கொண்டு சுழன்று வருங்காலை விசை அதிகரிக்க அதிகரிக்க உருளை உருவம் நீண்டு அதன் பின் உடுக்கை உருவத்தைப்பெற்று இரண்டு உடுக்கை உருவங்களாக மாறி ஒன்றையொன்று விட்டுப்பிரிந்து சுழன்று கொண்டு இருக்க வேண்டுமாம்.

இத்தியாதிக் காட்சி அபூர்வக் காட்சி என்று எண்ண வேண்டுவதில்லை. வானத்தில் இவ்விதக் காட்சி இன்றைக்கும் பார்க்கலாம். இரட்டை நட்சத்திரக் கூட்டங்களென்ற (Double Stars) காட்சி அனேகம் வானத்தில் காணப்படுகின்றன. ஒரு நட்சத்திரத்தை இன்னொரு நட்சத்திரம் சுற்றி வருகின்றது. இத்தக்காட்சி நமது பூமியை நமது சந்திரன் சுற்றுவது போலாகும். வடதிக்கில் ஸப்தரிஷிகளென்ற ஓர் நட்சத்திரக் கூட்டமொன்றுளது. அதில் ஐந்தாவது நட்சத்திரத்தை நமது "அருந்ததி" என்ற சிறியதோர் நட்சத்திரம் சுற்றுகின்றது. இவ்விரண்டும் இரட்டை நட்சத்திரக் கூட்டத்திற்கு உதாரணமாகும். இந்த அருந்ததி நட்சத்திரமும் தான் சுற்றும் பெரிய நட்சத்திரமும் ஒரு காலத்தில் ஒன்றாகவிருந்து நமது சந்திரன் பூமியைவிட்டுப் பிரிந்து போன மாதிரி தானும் பிரிந்து போயிருக்க வேண்டுமென்று ஓர் வானநூல் யூகை. ஆனால் இச்சிறு நட்சத்திரத்தை "அருந்ததி" என்ற பெண்ணாக்கியதும் இவள் பத்தினித் தனத்தைக் குறிக்க நமது கல்யாணப் பெண்ணை பந்தல் இலையை நீக்கி "அருந்ததியைப் பார்த்தாயா" என்று கேட்பதுமான நம்முன்னோரது ஒரு பழங்கதையொன்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகம் வருகின்றது.

சந்திரனைப்பற்றிய கதைகள் பலவுண்டு. இந்தச் சந்திர உலகத்தால் (Lunar World) பைத்தியம் உண்டாவதாக ஓர் மூட நம்பிக்கை உண்டு. ஆயிரக்கணக்கான பைத்தியகாரர்களை சிகிச்சையில் வைத்துப்பார்க்கும் டாக்டர்கள் பௌர்ண

மியில் வைத்தியம் அதிகரிப்பதாகச்சொல்லுவதைக்காணோம். லூனாடிக் (Lunatic) என்ற பதம் லூனா (Luna) சந்திரனிலிருந்து பெறப்பட்டது. இதனாலும் இந்த மூட நம்பிக்கையின் சம்பந்தத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

ராகு, கேது என்னும் பாம்புகள் சந்திரனை விழுங்குகின்றபடியால் சந்திரகிரகணம் (Lunar Eclipse) உண்டாவதென்று இன்னொரு மூட நம்பிக்கையுமுண்டு இந்தப் பீடையை நீக்க அனேகாயிரம்பேர் ஆறுகளிலும், கடல்களிலும் குளிக்கின்றார்கள். இதனால் பலருக்கு உயிர்ச்சேதமும் உண்டாகின்றது இந்த மூட நம்பிக்கை நமது இந்தியநாட்டைத் தவிர மற்ற எந்த உலகநாடுகளிலும் கிடையாது. இது என்ன மூடத்தனமென்போம்.! இவ்வளவு கோடி இந்திய மக்கள் இந்த அற்ப காரணத்தை உணராமல் மூடநம்பிக்கையை வளர்த்து வருவதை நோக்க எந்தக்காலத்திலாவது நமது நாடு விவேகமடையுமோ என்று சந்தேகிக்க வேண்டி வருகின்றது.

எரியும் விளக்கு முன்பாக நாம் நின்றால் நமது முதுகு இருளடைகின்றது. இது நமது முதுகுக்குக் கிரகணமாகும். கிரகணமென்றால் மறைவு, இருள் என்று பொருள். அல்லது நமது கையைக்கொண்டு தீபத்தை மறைத்தாலும் நமது மறைபட்ட கைப்புறத்திற்கு கிரகணமாகும். எந்த வஸ்துவாகிலும் வெளிச்சத்தைத் தடுத்தால் அதன் பின்புறம் கிரகணமாகும். அதுபோலவே சூரிய வெளிச்சம்படும் சந்திரனுடைய பக்கத்தை பூமி தடுத்தால் அது சந்திரனுக்குக் கிரகணமாகும். அதாவது சந்திரன் இருள் அடைந்ததென்று பெயர். சூரியனை நமது பூமி சுற்றுகிறது. நமது பூமியைச் சந்திரன் சுற்றுகிறது. இவைகள் ஒன்றையொன்று சுற்றி வருகையில் ஒன்றையொன்று மறைக்க நேரிடுகிறது. பௌர்ணமியில் பூமி சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஒருவேளை நடுவில் வருங்காலை அவ்வேளையில் சூரியனுடைய வெளிச்சம் சந்திரனில் படாமல் தடுக்கின்றது. சூரிய வெளிச்சம்படாத சந்திரனுடைய பக்கத்தை கிரகணமடைகின்றதாகக் கூறுகின்றார்கள். இந்தச் சொற்ப விஷயத்தைத் தெரிந்து கொண்டு அதனால் உண்டாகும் மூடப்பழக்கத்தை ஒழித்துவிடாமல் அதனால் உயிருக்குத் தோஷமுண்டாவதாக எண்ணி மதிகெட்ட வழக்கங்களை இந்த இருபதாம் நூற்றாண்டில் அனுசரித்து வந்தால் எந்தக்காலத்தில் தான் நமது நாட்டிற்கு விமோசன

மத நம்பிக்கைக்கு சாவுமணி.

உலகத்திலே எத்தனையோ இயக்கங்களும் ஸ்தாபனங்களும் தோன்றி மறைந்துள்ளன; மறைந்து வருகின்றன. சில இயக்கங்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் ஒரு காலத்துத் தேவை ஏற்பட்டிருக்கலாம். அத் தேவை மறையும்போது அவை மறைவது இயல்பே. இந்தப் பொதுவிதிக்குக் கட்டுப் படாத இயக்கங்களோ ஸ்தாபனங்களோ உலகத்தில் இல்லவே இல்லை.

தற்பொழுது உலகம் முழுதும் மத நம்பிக்கை குறைந்து வருகிறது. ருஷியாவிலே மதம் அழிந்துவிட்டது; ஆலயங்கள் மறைந்துவிட்டன; புரோகிதர், பூசாரிகளும் ஒழிந்துவிட்டனர். அமெரிக்காவிலே ஆலயங்கள் இருந்தாலும் ஆலய வழிபாடு செய்வோர் தொகை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றன. பாதிரிமார் செல்வாக்குக் குறைந்துவிட்டதாம். அறிவியக்கம் நாளுக்கு நாள் காட்டுத் தீப்போல் பரவி வருகிறதாம். துருக்கியிலும் மத ஆதிக்கம் ஒழிந்துவிட்டது. ராஜாங்கத்துக்கும் மதத்துக்கும் இருந்த தொடர்பு அறுபட்டு விட்டது. மதத்தின் ஸ்தானத்தைப் பகுத்தறிவு கைப்பற்றி விட்டது. இவ்வண்ணம் உலகம் முழுதும் மத நம்பிக்கை குறைந்துவரக் காரணமென்ன? காரணங்கள் இரண்டு; ஒன்று தேசிய சம்பந்தமானது; மற்றொன்று சதாசாரச் சார்புடையது.

மதக்கொள்கைகளும் நம்பிக்கைகளும் விஞ்ஞான சாஸ்திர உண்மைகளுக்கு முரண்பட்டவைகளாக இருக்கின்றன, எனவே விஞ்ஞான சாஸ்திரம் வளர வளர மத நம்பிக்கை

மென்போம்! நமது இந்திய மக்களுடைய அறிவுக்கே உண்மையில் "கிரகணம்" பிடித்ததாகச் சொல்லலாமேயொழிய ராகு, கேதுக்கள் சந்திரனையும் சூரியனையும் விழுங்குவதாகச் சொல்வது கட்டுக்கதையேயாகும்.

குறைந்துகொண்டே வருகிறது. விஞ்ஞானத் துறையில் முன்னேற்றமடைந்த தேசங்களில் மத நம்பிக்கை முற்றிலும் கலகலத்துப்போய்விட்டது. இதை எவராலும் மறுக்கவே முடியாது. விஞ்ஞான உண்மைகளை எதிர்த்து நிற்க மத நம்பிக்கைகளுக்கு சக்தியில்லை. ருசுப்படுத்தப்படாத விஷயங்களை நம்ப மக்கள் தயங்குகின்றனர்—மறுக்கின்றனர். பிரபஞ்சத்தில் பல துறைகளில் பிரதி தினமும் நடைபெற்று வரும் ஆராய்ச்சிகள் எல்லாம் மத நம்பிக்கைகளை வேரறுக்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன. கிறிஸ்துமதச் செல்வாக்கு உச்சஸ்தானத்திலிருந்த காலத்திலே கிறிஸ்துமத எதிரிகள் தமது அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சினர். இன்றோ கிறிஸ்துமதம் பகிரங்கமாகத் தாக்கப்படுகிறது. கிறிஸ்து மதக்கொள்கைகள் சதாசாரத்துக்கு முரணானவையென்று பகிரங்கமாகத் தாக்கப்படுகின்றன. ஏனைய மதங்களுக்கும் இக்கதியே ஏற்பட்டிருக்கிறது. உண்மையில், ஒரு காலத்திலே வானமண்டலத்திலே பறந்துகொண்டிருந்த மதக்கொடி அற்று வீழ்ந்துவிட்டது.

எனினும் பழமை விரும்பிகள்—மதவெறியர்கள் லக்ஷியம் செய்யவில்லை. "ஆமாம்! ஆமாம்! மதத்தையும் கடவுளையும் எத்தனையோ பேர் எதிர்த்துப்பார்த்தார்கள். ஒன்றும் சாயவில்லை. நாஸ்திகம் புதியதல்ல. ஆஸ்திகம் தோன்றிய அன்றே நாஸ்திகமும் தோன்றியுள்ளது. கடைசியில் நாஸ்திகமே தோல்வியுற்றது. எனவே தற்காலமத எதிர்ப்பைப்பார்த்து எவரும் அஞ்சவேண்டியதில்லை. ஆஸ்திகத்தை நாஸ்திகம் வெல்லவே செய்யாது. ஆஸ்திகம் அழியாதது" என அவர்கள் கூறித் திருப்தி அடைகிறார்கள்.

ஆனால் இவர்கள் உண்மை நிலையை அறிந்தவர்கள் அல்ல. பழங்கால நாஸ்திகத்துக்கும் தற்கால நாஸ்திகத்துக்கும் பெருத்த வித்தியாசமுண்டு. லோகாயதம் தோன்றியகாலத்திலே விஞ்ஞான சாஸ்திர உணர்ச்சியே தோன்றவில்லை "சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது. இராகு கேதுக்கள் சூரிய சந்திரர்களைச் சில குறிப்பிட்ட காலத்தில் விழுங்கிக் கக்குகின்றன. இரும்பைப் பொன்னாக்கலாம்; கல்பமுண்டு சிரஞ்சீவியாகலாம்" என்பனபோன்ற நம்பிக்கைகள் தாண்டவமாடிய காலத்திலே லோகாயதம் தோன்றியது. அத்தகைய லோகாயதத்தை—நாஸ்திகத்தை ஆஸ்திகர் வெகு சுலுவில் தோற்கடித்திருக்கக் கூடும். அக்கால நாஸ்திகர்க

ஞர்க்கு விஞ்ஞான உண்மைகள் துணை நிற்கவில்லை. நுண்ணிய ஆராய்ச்சி முன் எதிர் நிற்காத யுக்தி வாதங்களினாலேயே அக்கால நாஸ்திகர் ஆஸ்திகரைத் தாக்கிவந்தனர். எனவே நாஸ்திகர் தோல்வியுற்றிருக்கலாம்.

நாஸ்திகரைத் தோற்கடித்த ஆஸ்திகர் எல்லாம் வஞ்சகர் என்றோ மோசக்காரர் என்றோ மூடர்கள் என்றோ நான் கூறவில்லை. அவர்கள் நம்பியபடி அவர்கள் நடந்துகொண்டார்கள். தெய்வ நம்பிக்கையின்றிப் பிரபஞ்சமே நசித்துவிடுமென்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள். எனவே அவர்கள் அக்காலத்துப்பெற்றிருந்த அறிவின் துணைகொண்டு ஆஸ்திகத்தை நிலை நாட்ட முயன்றனர். ஒரு பிரச்சினையை முடிவு செய்வதற்குத் தேவையான சாதனங்கள் எவையோ, அவை இல்லாதிருந்த காலத்திலேயே அவர்கள் அப்பிரச்சினையை முடிவுசெய்தனர். பகுத்தறிவுப்படியும் சரித்திரீகமாகவும் மதம் இன்றியமையாத் தேவையென நிலைநாட்ட அவர்கள் முயன்றனர். ஆனால் அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான சரித்திர ஞானமோ விஞ்ஞானமோ அவர்களிடம் இருக்கவில்லை. எனவே பகுத்தறிவு முன் நிற்கமுடியாத யுக்தி வாதங்களையும் கூடார்த்தச் சொற்றொடர்களையும் பகட்டு வாதங்களையும் காட்டி மதத்தை ஆதரிக்கத் துணிந்தனர். அவர்களாலானது அவ்வளவே. அதற்குமேல் நாம் அவர்களிடம் எதிர்பார்க்கவே முடியாது?

ஆனால் ஊத்துக்கு நில்லாத முன்னோர் வாதங்களைக் காட்டி இக்கால ஆஸ்திகர்கள் உலகத்தை ஏமாற்றப் பார்ப்பது தான்வெகுஆச்சரியமாகஇருக்கிறது. மதவிரோதிகளுக்கு உதவியான சாதனங்களை ''சப்ளை'' செய்வது விஞ்ஞான சாஸ்திரங்களின் நோக்கமல்ல; எனினும் மத விரோதிகளுக்குத் தேவையான தகவல்களையளிப்பதே விஞ்ஞான சாஸ்திரிகளின் வேலையாக இருந்து வருவதாய்ப் பலர் நம்புகிறார்கள்.

விஞ்ஞான சாஸ்திரங்களின் உண்மையான நோக்கம் அறிவை வளர்ப்பதே; ருசுப்படுத்தக் கூடிய உண்மைகளை பகிரங்கப்படுத்துவதே; ஆனால் விஞ்ஞான உண்மைகள் பல மத உண்மைகளுக்கு முரண்படலாம்; ஆனால் இது இரண்டாம் பக்ஷமான பலன். விஞ்ஞானிகள் இதை லக்ஷ்யம் செய்வதில்லை. நேரடியான பலனே அவர்களுக்கு முக்கியம்; மறைமுகப் பலன்களை அவர்கள் மதிப்பதில்லை; அல்லது

பிரமாதப்படுத்துவதில்லை. சாதாரண விஞ்ஞான உண்மைகளும்கூட மதத்துக்கு முரணாகவே இருக்கின்றன. எனவே மதத்தை யொழிக்கவே விஞ்ஞானிகள் முயல்வதாக சாமானியர் முடிவு கட்டி விடுகின்றனர். விஞ்ஞான சாஸ்திரிகள் கடும் உழைப்பாளிகள்; கருமமே கண்ணாயினார். காலத்தின் அருமையை அவர்கள் நன்கறிவார்கள் தம்கடமைகளையும் அவர்கள் நன்குணர்வார்கள். அவர்களது ஆராய்ச்சியில் மதவிரோதமான பல உண்மைகள் வெளியாகின்றன; ஆனால் அவைகளை அவர்கள் லக்ஷியம் செய்வதில்லை; ஏனையோரே லக்ஷியம் செய்கிறார்கள்; பீதியடைகிறார்கள்; கடவுளருளிய வேதங்களில் நம்பிக்கை வைத்தோர் நடு நடுங்குகிறார்கள். இயற்கையை நடுக்கத்துடன் ஆராய்ச்சி செய்ய விஞ்ஞான சாஸ்திரிகள் முயன்றபோதே எல்லாம் தலைகீழாக மாறத்தொடங்கியது. அக்காலத்திலே மதமே பிரபஞ்சத்திலே ஆதிக்கம் செலுத்தி வந்தது. பெரிய எதிர்ப்புகளுக்கிடையே—தடைகளுக்கிடையே—ஆராய்ச்சி வேலைகள் நடைபெற்று வந்தன.

இப்பொழுதோ பழைய ராஜா அடிமையாகி விட்டான். மதம் அறிவுக்கு அடிமைப்பட்டு விட்டது உண்மையாயினும் மதவாதிகள் அதை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதில்லை. அறிவியக்க வாதிகளை மதவாதிகள் இப்பொழுது எதிர்ப்பதில்லை; ஹிம்சிப்பதில்லை. எனினும் விஞ்ஞான உண்மைகள் மத உண்மைகளுக்கு முரணல்லவெனப்பிரசாரஞ் செய்யத்தொடங்கியிருக்கிறார்கள் கிறிஸ்தவர்களின் ஆதியாகமம் பூகர்ப்ப சாஸ்திரத்துக்கு முற்றிலும் முரணானது. ஆனால் கிறிஸ்தவப்பாதிரிமார் சொல்வதென்ன? "ஆதியாகமம் பூகர்ப்ப சாஸ்திரத்துக்குப் பொருத்தமானதே. பூகர்ப்ப சாஸ்திர உண்மைகளைத்தான் ஆதியாகமம் தெளிவாக விளக்கிக் கூறுகின்றன" என பாதிரிமார் மழுப்புகிறார்கள். இவ்வளவாவது அவர்கள் ஒப்புக்கொள்ள முன் வந்தது அறிவியக்கத்துக்கு ஒரு பெரிய வெற்றியாகும். பூகர்ப்ப சாஸ்திரத்தையே ஒரு காலத்து எதிர்த்தவர்கள் இப்பொழுது இவ்வளவாவது ஒப்புக்கொள்வது பெரிய காரியமல்லவா! இதனால் விஞ்ஞான சாஸ்திரங்களை மதவாதிகள் ஒப்புக்கொள்வதாகவே ஏற்படுகிறது. ஆனால் அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை. நிரப்பொறியாகவே ஒப்புக்கொள்கிறார்கள் அவர்கள் கூறுவது போல் கிறிஸ்தவ ஆகமம் பூகர்ப்ப சாஸ்திர உண்மைகளுக்கு அனுகுணமாயில்லை. அனுகுணமாக இருப்

சிறு கதை

நான்கு வருடங்களுக்கப்பால்

(ஜே. பி. கிருஷ்ணன்)

வசந்த காலம்! கதிரவனின் அக்கினிக்கிரணங்கள் மறைந்து விட்டன. கருக்கலிருட்டு! ஆனால் சந்திரன் புன்சிரிப்போடு வானத்திலே தவழ்ந்தான். மக்களுக்கு இன்பமூட்டும் அவனது நன் முயற்சியிலே இளந்தென்றலும் கலந்துகொண்டது. இயற்கையளித்த ஒவ்வொரு இருதயத்திலும் புத்துணர்ச்சி! குதூகலம்.

மாடியின் வெளிப்புறத்திலே, ஒரு பாயின்மீது வீற்றிருந்தனர் மீனலோசனியும், சிவராமனும் நிலாக்குளித்த வண்ணம்! இருவரும் நெடுநேரமாகப் பேசவில்லை. அவர்கள் மனதை அழுத்திக்கொண்டிருந்த வேதனை அவர்களை வதைத்தன. அடிக்கடி நெடிய பெருமூச்சுகள்; விவரிக்க முடியாத துன்பச் சுழலில் இருவரும் அமிழ்த்தப்பட்டிருந்தன ரென்பதை அவர்களது கறுத்துச் சோர்ந்த வதனங்கள் விளக்கின.

ஏதோ கனவுகண்டு விழித்தவன்போலச் சிவராமன் கேட்டான் "அந்தக் கதையை எழுதி முடித்துவிட்டாயா மீனலோசனி?" என்று தடுமாற்றக்குரலில்.

"இல்லை. முக்கால் பாகத்திற்கு மேல் எழுதியிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. கடைசியாக

பதாகக் கூறி, செத்து வரும் மத உணர்ச்சிக்கு—மத நம்பிக்கைக்கு—புத்துயிரளிக்கவே அவர்கள் முயல்கிறார்கள். விஞ்ஞான சாஸ்திர அறிவு பரவப்பரவ மத நம்பிக்கை ஒழிவது திண்ணம். ஒழியத்தொடங்கி விட்டது. ஏன்? ஒளியின் முன் இருள் நில்லாது. விஞ்ஞானம் ஒளி: மதம் இருள்.

ஒரு முக்கியமான கட்டத்தில் நிறுத்தவேண்டியதாய்விட்டது. அதை எப்படி முடிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை'' என்றாள் மீனலோசனி சற்று வருத்தத்துடன் தாழ்ந்த குரலில்.

''என்ன! மெச்சத் தகுந்த பல சிறு கதைகளை எழுதின உன் பேனாவுக்கும், மனதுக்குமே தெரியாத ''முடிவு'' எப்பேர்ப்பட்டதாயிருக்கவேண்டும்!! அதை நான் கொஞ்சம் பார்க்கலாமா? ஒருவேளை என் யோசனையும் அதற்குப் பயன்படுவதாயிருந்தால்..............................''

''ஆமாம்! அதைத்தான் சொல்ல நினைத்தேன் யோசனைமட்டுமல்ல. சிவம்! நீயேதான் அந்தக் கதையை முடிக்க வேண்டும். அதைத் தொடர்ந்தெழுத என் பேனா மறுக்கிறது. மனமும் சஞ்சலப்படுகிறது. தைரியமில்லை! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்'' என்றாள் மீனலோசனி ஒருவித வாஞ்சையோடு; அவள் குரல் கம்மியிருந்தது.

இருவரும் எழுந்து அறையினுள் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தனர். பிரகாசமான ஒரு விளக்கின் வெளிச்சத்திலே, தான் எழுதின சிறு கதையின் கையெழுத்துப் பிரதிகளைப் படிக்க ஆரம்பித்தாள் மீனலோசனி. சிவராமன் கவனத்துடனும், ஒருவித மனக்கிளர்ச்சியுடனும் கேட்டான்.

* * *

குழந்தைகளான மாலதிக்கும் கேசவனுக்கும் நாராயணனென்றால் உயிர்! அவன் ஒரு மாணவன். மூவரும் பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்புத்தான். கேசவனும் மாலதியும் அண்ணன் தங்கைகள், செல்வந்தர் வீட்டுக்குழந்தைகள், நாராயணன் ஒரு எளிய குடும்பத்துப்பையன்தான். என்றாலும் மூவருக்குள்ளும் மிகுந்த மன ஒற்றுமை! அன்பின் பிணைப்பு! மாலதி தனக்குக் கிடைக்கும் தின்பண்டங்களிலெல்லாம் பிரியத்துடன் நாராயணனுக்கும் பங்கு தருவாள். ஒரு நாளைக்கு அவன் பள்ளிக்கூடம் வராவிட்டால் அவளுக்கு என்னமோபோலிருக்கும், அன்றைக்குப் படிப்பே ஓடாது. சதா அவன் நினைவுதான் குறுக்கிடும். பொதுவாக நாராயணனில்லாத எந்த விளையாட்டும், எந்தப் பேச்சும், எந்த செய்கையும் அவளுக்கு ரசிப்பதில்லை! அந்தக் குழந்தை நெஞ்சிலே நாராயணன் அழியாத ஒரு தனியிடம், தனிப் பெருமை

பெற்றுவிட்டான். நாராயணன் 'மாலதியின்மேல் வைத்திருந்த அன்பும் இதற்கு இளைத்ததல்ல, அவளுக்கு அவன் தான் உயிர்!

அவன் அடிக்கடி மாலதியின் வீட்டுக்கு வருவான். கேசவனையும் சேர்த்துக்கொண்டு மூவரும் விளையாடுவார்கள். "நாராயணனும் மாலதியும் புருஷன் மனைவி, கேசவன் தான் கலியாணம் செய்விக்கும் புரோகிதன்." இந்த விளையாட்டில் அவர்களுக்கு ஒரு தனிப்பிரியம், மாலதியின் பெற்றோர்கள் இதைப்பார்த்துப் பூரிப்படைவார்கள், என்றாலும் அந்த ஏழைப் பையனைச் சேர்த்துக்கொண்டு விளையாடுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. "இருந்தாலும் குழந்தைகள் தானே! வயதுவந்தால் எல்லாம் தெரிந்துகொள்வார்கள்" என்பது அந்தப் பணக்காரப் பெற்றோர்களின் நம்பிக்கையாக இருந்தது!

* * *

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது. மனித வாழ்க்கையில் பல மாற்றங்கள்! புரட்சிகள்! மாலதி மங்கைப்பருவமடைந்துவிட்டாள். கேசவன் மேல் படிப்புக்காக சீமைக்கு அனுப்பப்பட்டான். நாராயணன் தன் ஏழைத் தகப்பனை இழந்துவிட்டான். அவனுக்கு அப்பொழுது வயது 23. "மெட்ரிகுலேஷன்" வரையில் தான் அவனால் படிக்க முடிந்தது. வறுமையின் கொடுமை அவன் நெஞ்சைப் பிளந்தது! ஏழ்மையின் "கோரம்" அவன் வாழ்விலே ஜ்வலித்தது! பிராமணர்கள் நிறைந்த தென்னாட்டு அரசியல் உத்தியோகத் துறையில் அந்த ஏழைப் பிராமணரல்லாத வாலிபனுக்கு ஒரு சின்ன உத்தியோகமும் கிடைக்கவில்லை. அவன் முயற்சிகள் யாவும் வீணாயின. எனவே நாராயணன் ஒரு வட்டிக்கடை குமாஸ்தாவாக அமர்ந்தான் 14 ரூபாய் சம்பளத்தில்!

மாலதியின் பால் அவன் வைத்திருந்த அன்பு ஒரு புதிய வடிவத்தில் கனிந்து பல இன்பகரமான தோற்றங்களை அவன் மனத்தில் எழுப்பின. அவன் அவளது காதலுக்கு அடிமையானான், "அவள் ஏன் எப்பொழுதுமே என்னருகில் இருக்கலாகாது?" சீ! இது ஒரு வீண் நினைப்பு! முடவனின் கொம்புத் தேனாசை! மாலதியை இப்பொழுது பார்க்கவே முடியாது. பார்த்தாலும் பேச முடியாது. அவள் பருவமடைந்து விட்டவள்! இந்துக்களின் புனிதமான(?) மதாச்சாரப்படி நிபந்தனையற்ற கைதியாக வீட்டுக்குள் அடைபட்

டுக் கிடக்கவேண்டியவன்! மேலும் அவன் போகத்தில் புரளும் செல்வக்குஞ்சு! அவன் எழ்மையின் சொரூபம்!

❖ ❖ ❖

அன்றுமாலை புயல் காற்றும் மழையும் கோரமாக அடித்தன! கால்வயிற்றுக் கஞ்சிக்குக் காணம் போடும் ஏழைமக்களின் சிறு குடிசைகளை வாயுபகவானும்(?) வருணதேவனும்(?) வெகு எளிதாகக்கபளீகரம் செய்தனர்! ஏழைகளென்றால் தெய்வங்களுக்கும் கூட தொக்கு போலும்! நன்றி கெட்டதுகள்!

தெருவில் தன் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தான் நாராயணன், மாலதியின் வீட்டுக்கருகாமையில் வரும்பொழுது திடீரென மழை வந்துவிட்டமையால், அவன் மாலதியின் வீட்டிலேயே ஒதுங்க நேர்ந்துவிட்டது. வேகமாகப் படிகளைத் தாண்டி தாழ்வாரத்தில் ஏறி நின்றான். அவன் நெஞ்சுக்குள் ஒரு வித மகிழ்ச்சி ஊறியது! மாலதியின் பெற்றோர்கள் வீட்டில் இல்லையென்பதும், மாடியிலிருந்த மாலதி தன்னைப்பார்த்து விட்டாளென்பதும் அவனுக்குத் தெரியாது. ஆனால் மாலதியைப்பார்க்கவேண்டுமென்ற ஆசை பொங்கியது அவன் உள்ளத்தில்! ஆனால் உள்ளே போகத்துணிவில்லை.

“நாணு! உள்ளே வாயேன்!” என்ற குரலைக்கேட்டதும் திடுக்கிட்டான் நாராயணன், அவன் மனதைக் கிள்ளியது அந்தக்குரலின் இனிமை! ஆவலோடு அந்தப்பக்கமாகத் திரும்பினான். அழகிய அதரங்களில் புன்னகை தவழ வாசற்படியில் தன்னைப்பார்த்தபடியே நின்றிருந்தாள் மாலதி. இருவர் கண்களும் சந்தித்தன. ஒரு நொடியில் பல விஷயங்களை பரிமாறிக்கொண்டன அந்த நயனங்கள்; மாலதியின் களங்கமற்ற யௌவனத்தோற்றம் நாராயணன் மனத்தைச் சிதறவடித்தது! அவன் பிரமித்துப்போய் நின்று விட்டான்!

நிறைந்த ஆர்வத்தோடு மாலதி அவன் கரத்தைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள். நாராயணன் பயத்தோடு அவள் பின்னால் சென்றான்.

“ஏன் இப்படி நடுங்குகிறாய்? வீட்டில் யாருமில்லை, பயப்படாதே! பெரிய கோழையாகி விட்டாயே! முன் போலிங்கு வருவதற்கென்ன? என்னை அடியோடு மறந்து விட்டாயா நாணு?” என்று துடிப்பாகக் கேட்டாள் மாலதி.

"மாலதி! நான் என்ன சொல்லப்போகிறேன்! உனக்குத் தெரியாததொன்றில்லை. என் உயிருள்ளவரைக்கும் இந்த நெஞ்சிலிருந்து உன்னையகற்றுவது முடியாது. இருந்துமென்ன! நான் ஏழை! உங்கள் குடும்பத்திற்கும் எனக்கும் தொண்டமானுக்கும் தோட்டிக்குமுள்ள வித்தியாசம்! முன்போல உன்னிடம் நெருங்கிப்பழகுவது முடியாத காரியம். என் தோழன் கேசவனும் வெளிநாடு சென்றுவிட்டான். நான் இங்கு வந்து தான் என்ன பயன்? வீணாக உன் பெற்றோரின் அதிருப்திக்கு ஆளாகவேண்டியது தான்; ஆனால் இந்த மிருதுவான கரங்களால் நீ அன்புடன் கொடுத்த தின்பண்டங்களை இப்பொழுது நினைத்தாலும் என் வாயினிக்கிறது!" என்று மாலதியின் கரங்களைப்பற்றி முத்தமிட்டான் நாராயணன். அவன் தேகமெங்கும் குபீலென்று ஒருவித புளகாங்கிதம் நிறைந்தது!

மாலதியின் கண்கள் களிப்புடன் ஜொலித்தன! நாணத்தால் முகம் சிவந்தது. உடல் துவண்டது. ஆனாலும் அவள் தைரியமாகச் சொன்னாள்.

"நாணு! நாம் விளையாடுவோமே; அந்த விளையாட்டு. அதை நம் நிஜ வாழ்க்கையில் அனுசரிக்கும் நாள் வந்துவிட்டது. ஆனால் நீ சொன்ன "ஏழை!" என்ற வாக்கியம் என் மனதை அறுக்கிறது. ஆம்! பணப்பேய் பிடித்த என் பெற்றோர்கள், கனவிலும் செல்வத்தைப் போற்றும் சடர்கள் மனிதத்தன்மையை உணரமாட்டார்கள்! பணம்! பணம்! அவர்களுக்கு வேண்டுவது அது தான்! மனிதனல்ல! அந்தோ இச்சமயத்தில் அண்ணாவும் ஊரில் இல்லையே! நமது கதி.........அதற்கு மேல் மாலதியினால் பேச முடியவில்லை தொண்டையடைத்துக்கொண்டது. அவள் கண்கள் கலங்கிக் கொண்டிருந்தன- விக்கலும் விம்மலும் பீறிட்டன.

நாராயணன் ஒன்றும் பதில் சொல்லவில்லை; அவன் கண்களும் கலங்கி விட்டன. ஆதரவோடு மாலதியைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டான். வெளியே பயங்கரமான காற்றும், இடியும், மின்னலும் கலந்த மழை கோரமாக 'ச்சோ" வெனப் பொழிந்துகொண்டிருந்தது. அந்த இரண்டு களங்கமற்ற இளம் இருதயங்களிலும் புகுந்துகொண்டு உலுப்பிய பலவித உணர்ச்சியின் அலைகள்! துக்ககரமான நினைப்பின் நிழல்கள்! அந்த அர்த்தமற்ற சப்தத்தோடு சென்று கலந்தன!

ஒரு வருடத்திற்கு முன்னாலிருந்தே மாலதியின் கலியாணத்திற்கு அவளது தந்தை கைலாச முதலியார் ஏற்பாடு செய்து வந்திருக்கிறார். இது அவளுக்கு தெரியாது.

சென்னையில் பிரபல நகை வியாபாரி சம்பந்தமுதலியார் பெரிய சொத்துக்காரர்; கைலாச முதலியாரின் தூர பந்து. அவருக்கு இரண்டாந்தாரமாக மாலதியைக்கொடுப்பதாக வாக்களித்திருந்தார் கைலாசமுதலியார். இதையறிந்தபோது மாலதி உண்மையிலேயே திடுக்கிட்டுப் போய்விட்டாள்! தன் மனோபீஷ்டத்தை அவளால் வெளியிடாதிருக்க முடியவில்லை. தான் நாராயணனைக் காதலிப்பதை மனம் திறந்து சொன்னாள் பெற்றோர்களிடம். ஆனால் பயனில்லை! அவர்களது வசவுக்கும், தூற்றலுக்கும், கோபத்திற்கும் ஆளானதைத் தவிர்த்து வேறு விமோசனம் ஏற்படவில்லை. மாலதி அதற்குச் சிந்திய கண்ணீர் வெறும் பாழ்ங்காட்டிற்கடித்த நிலவாய் விட்டது! அவர்கள் 'அடம்' பூரணமாக வலுப்பெற்று விட்டது.

"நான் பெற்ற மகள், அவளிடம் எனக்கில்லாத அக்கறை சுதந்தரம அவளுக்கெப்படி வந்தது? நான் அவருக்கு ஏற்கனவே வாக்களித்து விட்டேன். அதைக் காப்பது என் கடமை! திக்கற்ற ஒரு தரித்திர நாராயணனை மனத்தில் கொண்டிருக்கும இந்தச் சிறுக்கியால் என் நாணயம் காற்றில் பறப்பதா? அது முடியாது. அவசியம் கலியாணம் நடந்துதான் தீரவேண்டும்!" என்று ஒரே மூர்க்கத்தனமாகப் பேசினார் பிடிவாதக்கார கைலாச முதலியார். தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்னும் தகைமையாளர்!

பாவம்! மாலதி என்ன செய்வாள்! சமுதாயத்தின் அடிமைகளாகக் கருதப்படும் சுதந்தரமற்ற பெண்ணினத்தில் உதித்தவள்! நாராயணனுக்கு தைரியமும், உற்சாகமும் ஊட்டிய அவள் மனம் இடிந்து சரிந்து விட்டது! அவள் அடைந்த துக்கத்திற்கு அளவு கோலுதல் முடியாத காரியம். துயரமே வடிவானாள் மாலதி! அவள் சிந்திய கண்ணீர்த் துளிகளில் நாராயணன் உருவம் தோன்றி "உன் உறுதி எங்கே? கோழையாக இருக்காதே!" என்று சொல்லுவதைப் போலிருந்தது, அவள் பிரமை கொண்ட மனத்திற்கு.

கதையை வளர்த்துவானேன், சமூகத்தில் உண்மைக்கும், நியாயத்திற்கும் முக்கியத்துவமில்லை. செல்வத்திற்குத்தான்

செல்வாக்கு! எனவே பணத்திமிரும், அத்துடன் சேர்ந்த மூடத்தனமும் தம் காரியங்களைச் செய்து முடித்தன.

மாலதி பலாத்காரமாக சம்பந்த முதலியாருக்கு மனைவியாக்கப்பட்டாள்! என்ன கொடுமை! நாராயணன் மனம் பதறினான்! இரத்தக்கண்ணீர் வடித்தான்! சிறு குழந்தையைப் போன்று தேம்பித் தேம்பி அழுதான்! வேறு என்னதான் அவனால் செய்ய முடியும்? அவன் ஏழை!! திக்கற்றவன்!!

சம்பந்த முதலியாரோடு அழுத கண்ணும், உடைந்த மனமுமாக மாலதி ரெங்கூனுக்கு அனுப்பப்பட்டாள். அவளது பரிதாப நிலைமையைக் கண்ட கல்நெஞ்சும் கரைந்தது! என்ன பயன்?

சம்பந்த முதலியாருக்கு வயது 46. முழுக்கிழவரல்ல. எனினும் அருவருப்பைத்தரும் தோற்றம்! பூதாகாரமான உடல்! விகாரம் பொழியும் முகார விந்தம்! அழுத்தமான பெரிய தொண்டை. குணத்திலோ கொள்ளிக்கட்டைதான்! எப்படியோ நான்கு வருடங்கள்! ஆம்! நான்கு முழுவருடங்களை அந்த மனிதப்பன்றியோடு துன்பக்கேணியில் நீந்திக் கழித்து விட்டாள் மாலதி. அவள் உருவம் அடியோடு மாறி விட்டது! வாழ்வின் இன்பம் அஸ்தமித்து விட்டது. ஆனால் "பெண்கள் சுதந்தரம் பெறவேண்டும்" என்பதில் அவளுக்கிருந்த ஆர்வமும், அதை வலியுறுத்தும் வகையில் பத்திரிகைகளுக்குச் சிறு கதைகள் எழுதும் சேவையுந்தான் அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலும், ஊக்கமும் அளித்து வந்தன. பெண்ணடிமை அவள் மனதைப்பெரிதும் பாதிக்கச்செய்தது.

ஃ ஃ ஃ

"நாராயணனை அவள் மறக்கவில்லை. மறக்கவும் முடியாது. அவன் தன்னிடம் கொண்டிருந்த உண்மைக்காதலை நினைக்கும் போது அவள் மனம் உருகிவிடும். உடம்பு நெருப்பால் தகிக்கப்பட்டதைப் போல சூடு கொள்ளும்! நாராயணனுக்கு மாலதி பல கடிதங்களெழுதினாள். ஆனால் அந்த பரிதாபத்திற்குரிய பெண், நாராயணனிடமிருந்து ஒரு கடிதமும் பெறவில்லை!..............."

"லோசனி!" என்று கூவினான் சிவராமன். மீனலோசனி படிப்பதை விட்டு நிமிர்ந்து பார்த்தாள். சிவராமன் சோகத்தால் விழுங்கப்பட்டிருந்தான்! அவன் முகத்திலே விவரிக்க முடியாத பல வேதனையின் சின்னங்கள்! கண்

இமைகளில் முத்துப்போல தங்கியிருந்த நீர்த்திவலைகள் கன்னங்களில் உருண்டு ஓடின!

“ஏன்!” என்றாள் மீனலோசனி பதைப்புடன்.

“லோசனி! என் இருதயத்தின் ஒரு மூலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பழம்பெரும் நினைவுகளைக் குத்திக் கிளப்பி விட்டாய்! ஆம்! இன்பம் தோய்ந்த எமது வாழ்க்கையின் சம்பவங்கள் அப்படியே பிரதி பலிக்கின்றன! ஆனால் ஒரு பெரிய தவறு நேர்ந்திருக்கிறது. அவன் அவளுக்குப் பல நெஞ்சுருக்கும் கடிதங்கள் எழுதினான். ஆனால் அவைகளில் ஒன்றுகூட அவளுக்குக் கிடைக்கவில்லை! இதில் ஏதோ பெரிய மோசடி நடந்திருக்கிறது! அவன் அவளை ஒரு தினங்கூட மறந்திருக்கவும் மாட்டான்” என்றான் சிவராமன் மங்கியகுரலில்.

மீனலோசனி திகைத்துப் போய் விட்டாள்! அவள் முகம் ஆழ்ந்த யோசனையை அறிவித்தது. “ஆம்! இருக்கலாம், அவருடைய வேலையாகத்தானிருக்கவேண்டும்! சந்தேகப் பிராணியல்லவா அது! பயமில்லை! அதை வைத்துக் கொண்டு மாரடித்துக்கொள்ளட்டும்! சிவா! இன்னும் கொஞ்சந்தானிருக்கிறது படித்து விடுகிறேன்” என்று மேலேபடிக்க ஆரம்பித்தாள் மீனலோசனி.

* * *

சம்பந்த முதலியார் ஒரு வியாதியஸ்தர், இரத்தக்கொழுப்பு உடம்பில் இருந்த வரையிலும் அவைகள் தலைகாட்டவில்லை. அவரது உடல் தளர்ந்ததும் பல பிணிகள் முளைத்துவிட்டன; அவர் படுக்கையோடு படுக்கையாய் விட்டார். ஒரு நாள் அவருக்கு ஏற்பட்ட பக்கவாத ஜன்னியின் காரணமாக ஒரு காலும், கையும் சூம்பிப்போய் விட்டன. முகத்தில் ஒரு கோணல்! அந்த நிலைமையில் அவரைப்பார்க்கச் சகிக்கவில்லை. ஆம்! அவர் மீண்டும் எழுந்திருக்கும் அறிகுறிகளேயில்லையென்று சொல்லலாம். இப்படியாகச் சிலமாதங்கள் கழிந்தன.

விதவைப்பெண்களின் பரிதாப நிலைமை மாலதிக்கு நன்றாகத் தெரியும். அதைப்பற்றி அவள் பல கதைகள் எழுதியிருக்கிறாள். அந்த நிலைமை தனக்கே வரப்போவதை நினைக்கும்போது அவள் மனம் கலங்கும். ஆனால் அடுத்த வினாடி நாராயணன் நினைப்பும் வந்துவிடும். ஒரு

அர்த்தமற்ற ஆசை! ஒரு வேதனை கலந்த மகிழ்ச்சி! அவள் உள்ளத்தைக் கிளர்த்தும். பலப்பல எண்ணுவாள். கனவு லோகத்திலே சஞ்சரிப்பாள்!

"கணவரின் தற்போதைய நிலைமை, தான் படும் அவஸ்தை, காதலைக்கொன்ற சூடத்தகப்பனின் செய்கை" இவைகளைக் குறித்து தன்மனதில் பொங்கிக்கொண்டிருந்த ஆத்திரத்தை ஒரு கடிதமாகத் தீட்டினாள் மாலதி. செல்வச் செருக்குள்ள தன் தந்தைக்கு அனுப்பினாள் அக்கடிதத்தை. ஆனால் அதைப்படிக்கும் பாக்கியம் அவர் பெறவில்லை! கடிதம் அவரிடம் சேருமுன்னமே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பினால் மரணமடைந்தார் கைலாச முதலியார்! ஏராளமான சொத்துக்களையும் வைத்து விட்டு.

சீமையிலே படித்துக்கொண்டிருந்த கேசவனுக்கும், புருஷன் வீட்டிலிருந்த மாலதிக்கும் சாவுத் தந்திகள் பறந்தன. மாலதியின் கணவர் சம்பந்த முதலியார் மிகுந்த கலக்கத்துடன் அவளுக்கு விடைகொடுத்தனுப்பினார். அவரது புத்தி மாறிவிட்டது! மாலதியின் இன்ப வாழ்வு தன்னால் வியர்த்தமானதை எண்ணும்போது அவர் உண்மையில் வருத்தமடைந்தார். புருஷன் இறந்த பிறகு விதவைக்குப்புத்திவருவது போல!

மாலதி தன் பிறப்பு ஸ்தலத்தையடைந்தபோது முதன் முதலில் அவளைச் சந்தித்தவன் நாராயணன். நான்கு வருடங்களாக வாதமொடுங்கிக்கிடந்த இரண்டு இருதயங்களும் மலர்ந்தன! ஆனால் மணம் வீசவில்லை! ஏன்? அவள் பிறன் மனைவி! பணத்திற்கு அடிமைப்பட்டவள்! என்ன மகத்தான கொடுமை!

ஃ ஃ ஃ

இரண்டு வாரங்கள் கழித்து, கேசவனும் வந்து சேர்ந்தான் அவனது ஐரிஷ்மனைவியுடன்; ஊருக்குள் பெரியபரபரப்பு! பேச்சுப்பந்தல்கள்! பாவம்! ஒரு தமிழன் வெள்ளைக்காரச்சியைக் கலியாணம் செய்துகொண்டு விட்டதால் என்ன நஷ்டம் வந்துவிட்டதோ தெரியவில்லை, சாதிப்பித்தர்களுக்கு! மதக் கிறுக்கர்கள்! கேசவன் ஒரு தீவிர பகுத்தறிவு வாதியாக மாறிப்போயிருந்தான். அவனுக்கு ஜாதி, மதம், சாஸ்திரம், வழக்கம் இவைகளெல்லாம் கசந்துவிட்டன! எனவே தான் காதலித்த அந்த ஐரிஷ்மாதை மனப்பூர்வமாக மணந்துகொண்டான். அந்தப்பெண் தன் உயிரையே கேசவன்

மீது வைத்திருக்கிறாளென்றால் அது பொருத்தமானதே! கலியாணம் தெய்வீகமானதென்றும், அதற்குப் பெற்றோர்களின் அனுமதி அவசியம் தேவையென்றும் அவன் கருதவில்லை. கலியாணம் ஒரு தனிப்பட்ட ஆண் பெண் சுதந்தரம்! அதுவே பகுத்தறிவுக் கொள்கையுமாகும்.

தந்தையார் மாலதிக்கும் நாராயணனுக்கும் செய்திருக்கும் மலைபோன்ற தீங்கை—அநியாயத்தைக் கண்டு மனம் புழுங்கினான் கேசவன். தங்கள் மூவருக்குள்ளுமிருந்த பழைய அன்பின் பிணைப்பும் அதற்குத் தந்தையிட்ட முள் வேலியும் அவன் மனத்தைக் குழப்பியன! தீர்மானிக்கப்பட்ட மன உறுதியுடன் அவன் மாலதியிடம் சொன்னான்:—

"நடந்திருப்பது பெரிய மோசமான காரியம்! இதற்கு நாம் பரிகாரம் தேட வேண்டும். பெண்ணுரிமை பேச்சளவில் பலன் தராது. ஆம்! அந்த ரெங்கூன் பெரியவர் தான் செய்த கேட்டிற்குப் பிராயச்சித்தமாக மாலதியை மறக்க வேண்டும், அல்லது நாம் மறக்கச் செய்யவேண்டும்; நாம் நீதிக்குப் போராடுவோம்! சட்டம் நமக்குத் துணைநிற்கும்! அது எப்படியானாலும் சரி, நீங்கள் சுகமாக வாழவேண்டும். ஒரு உண்மைச் சகோதரனின் கடமை என்னுடையது. நாராயணன் காதல் குன்றாதிருந்தால், உனக்கும் பிரியமிருந்தால் சதியும் பதியுமாக மகிழ்ந்திருங்கள். உமது இளமையின் தோழமை அர்த்தமுள்ளதாகட்டும்! மாலதி என் ஆசை நிறைவேறுமா?"

தமையனின் தைரியமும், ஜீவகாருண்யமும், நிறைந்த பேச்சு மாலதியின் மனத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கிற்று; புத்துணர்ச்சி பெற்றாள், அவள் முகம் மலர்ந்தது, ஆனால் சற்று வருத்தத்துடன் சொன்னாள்.

"அண்ணா! துன்பம் நிறைந்த நான்கு வருடங்கள்! கொடுமையான சோதனைக்காலம்! பொருளாதார எமனாலும் திடசித்தமற்ற கோழையாகிய என்னாலும், சோக நெருப்பிலே தள்ளப்பட்ட நாராயணன் இன்னும் என்னைக் காதலிப்பதானால்......நான்........"

மனத்தில் பொங்கித் ததும்பும் உணர்ச்சிகள் அத்தனையும் கண்களிலே பிரதிபலிக்கச் சிவராமனை நோக்கினாள்

மீன லோசனி; வெளிறிப்போயிருந்த சிவராமன் முகத்திலே ஒரு புதியகளை! மங்கியிருந்த கண்களிலே ஒரு திவ்யமான ஒளி! அவன் மார்பு படபடத்தது! உதடுகள் பேசத் துடித்தன.

சோர்ந்துபோன அந்தக் களங்கமற்ற நெஞ்சுக்குள்ளே அன்புக்கவசமிடப்பட்டுத் தன் வடிவம் ஜொலித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள் மீனலோசனி! அடுத்த வினாடி சிவராமனின் அகன்ற மார்புக்குள் பாய்ந்தாள் அந்த வனிதாரத்னம்.

"கண்ணே! லோசனி! உனக்காக நான் உயிர் வாழுகின்றேன் என்றாலும் இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்த நான்கு வருடங்களாக என் உயிர் கொஞ்சங் கொஞ்சமாகப் போய்க்கொண்டிருந்தது, இன்று என்னைக் காப்பாற்றிவிட்டாய்! கரை சேர்ந்தேன். இனி நான் புது மனிதன்! எதற்கும் அஞ்சேன்! எதுவரினும் ஏற்பேன்" என்று கூறி கரைகடந்த ஆர்வத்தோடு மீன லோசனியை இறுகத்தழுவி அவளது பவழம்போன்ற அதரத்தில்........"

ஃ ஃ ஃ

படிகளில் "தட தட"வென்ற சப்தம்! அடுத்த வினாடி மீனலோசனியின் தமையன் பத்மநாபனும் அவனது ஆங்கில மனைவி மிஸஸ் லைனல் பத்மநாபனும் அந்த அறைக்குள் நுழைந்தனர். காதலன் மார்பில் களிப்பு வெறியில் மூழ்கியிருந்த மீனலோசனி பொருக்கென விலகி நின்றாள். அவர்களிருவர் மனதும் நாணியது.

"மன்னிக்க வேணும்! ஒரு முக்கியமான விஷயம். உங்களுக்கு உடனே தெரிவித்துவிட வேணுமென்ற ஆவல்! அவசரமாக ஓடி வந்தோம்! ஆமாம்! உங்கள் சுகவாழ்க்கையில் கவிழ்ந்திருந்த இருட்படலம் நீங்கிவிட்டது! பயமும், துன்பமும் தீர்ந்தன!" என்றான் பத்மநாபன்.

"என்ன சமாச்சாரம்? என்று கேட்பது போலச் சிவராமனும் மீனலோசனியும் பத்மநாபனை ஆச்சரியத்துடன் நோக்கினர்.

"கொளும்பிலிருந்து தந்தி வந்திருக்கிறது. மீனலோசனியின் புருஷர் பைரவ சுந்தர முதலியார் நேற்று இரவு 10-மணிக்கு மேல் காலமாய் விட்டாராம்! சாகும்பொழுது

ருஷிய ஆலயங்கள்.

ருஷிய ஆலயங்களுக்கு இன்று சொத்துக்களோ பூமிகளோ இல்லை. இதற்குக் காரணம் மத துவேஷமல்ல; தனி மனிதர் சொத்துக்கள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தமானதே காரணம். ஏனைய சொத்துக்களை சர்க்கார் கைப்பற்றிக் கொண்டது போலவே ஆலயச் சொத்துக்களையும் சர்க்கார் கைப்பற்றிக் கொண்டார்கள். சில வருஷங்களுக்கு முன் பஞ்சமுண்டானபோது பஞ்ச நிவாரண நிதிக்காக, ஆலய வழிபாட்டுக்குத் தேவையில்லாத தங்கம், வெள்ளி, ரத்தினங்கள் முதலியவற்றை சர்க்கார் ஆலய அதிகாரிகளிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார்கள். இதைப் பாதிரிமார் தீவிரமாக எதிர்த்தார்கள். சில பாதிரிமார் இதை ஆதரித்தனர். ஆலயங்களுக்கு சர்க்கார் சில சலுகைகளும் காட்டியுள்ளார்கள். உதாரணமாக ஆலய வழிபாடு செய்யும் இடங்களுக்கு சர்க்கார் வரி விதிக்கவில்லை. அதற்குப்பிறகு வருமானமுடைய சொத்துக்களை ஆலயங்கள் தேடிக்கொண்டன. அப்பேர்ப்பட்ட ஆலயங்களுக்கு சர்க்கார் பொருளுதவி செய்வதில்லை. பாதிரிமார், சிப்பந்திகள் சம்பளங்களுக்கு மத நம்பிக்கையுடையவர்கள் பொருளுதவி செய்து வருகிறார்கள்.

அவர் மீன லோசனிக்குச் செய்த கொடுமைகளை, சிவராமனின் கடிதங்களை மறைத்தது முதல் யாவும் சொல்லி வருந்தினாராம்! லோசனியின் மன்னிப்பைக் கோரினதுடன், அவள் தன் காதலன் சிவராமனை மறுமணம் செய்துகொள்ளவும் அனுமதித்தாராம்!'' என்றான் பத்மநாபன்.

அவர் தன்னால் வெறுக்கப்பட்டவராயிருந்தும், சென்ற நான்கு வருடங்களாக அவரால் துன்பம் அனுபவித்தவளாயிருந்தும், கடைசிக்காலத்திலாவது அவர் தன்னுடைய தவறை ஒப்புக்கொண்டு புத்திசாலித்தனமாக நடந்துகொண்டிருப்பதை நினைக்கும்போது மீனலோசனியின் மனம் தானாக இளகியது! என்னே! பெண்ணின் மிருதுவான இருதயம்!

நாஸ்திகம்.

(ஜாக் பெஞ்சமின்)

நாஸ்திகத்துக்கும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிப் பல தப்பெண்ணங்கள் தோன்றியுள்ளன. நாஸ்திகத்தின் உண்மை நிலை என்பதை ஒருவருமே ஆராய்வதில்லை. நாஸ்திகன் சில நம்பிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும் பிரபஞ்சத் தோற்றத்தின் மூலகாரணங்களை அவன் விளக்கவேண்டுமென்றும், தத்துவ சாஸ்திர சம்பந்தமான சிக்கல்களுக்கெல்லாம் அவன் முடிவு கூறவேண்டுமென்றும், ஜடப் பொருள்கள் தோற்றத்துக்கு அவன் காரணம் காட்டவேண்டுமென்றும், மற்றும் அவன் சிந்தனையே செய்யாத பல விஷயங்களைப் பற்றி அவன் விளக்கவேண்டுமென்றும் ஒரு தப்பெண்ணம் தோன்றியிருக்கிறது.

நாஸ்திகத்துக்கும் ஆஸ்திகத்துக்கும் உள்ள வித்தியாசம் கடவுளைப்பற்றியதாகும். பல தெய்வவாதியை எதிர்க்கும் ஏகதெய்வவாதி நாஸ்திக வாதத்தையே துணையாகக் கொள்கிறான்.

சந்தேகியின் நிலைமை தர்க்கரீதிக்கு முரண்பாடானது. சாப்மன் கோஹன் என்பவர் சமீபத்தில் வெளியிட்ட ஒரு புஸ்தகத்தில் கூறியிருப்பதாவது:—கடவுள் நம்பிக்கையைப் பொறுத்தவரை —ஆஸ்திகனுக்குக் கடவுள் நம்பிக்கையுண்டு. நாஸ்திகனிடம் அது இல்லை. இந்தப் புஸ்தகத்தை நான் வாசிக்கிறேனா இல்லையா என்னும் விஷயத்தில் எனக்கு நம்பிக்கையுண்டா இல்லையா என எனக்குத் தெரியாதென்று நீங்கள் கூறமுடியாது. ஒருவன் கடவுள் உண்டென்று நம்பினால் அவன் ஆஸ்திகன்; இல்லை என்பவன் நாஸ்திகன். வித்தியாசம் நம்பிக்கையைப்பற்றியதாகும். பல விஷயங்களில் சந்தேக வாதம் பொருத்தமாக இருக்கக்கூடும். ஆனால் கடவுள் நம்பிக்கையைப் பொறுத்த மட்டில் அது பொருத்தமாக இல்லை. சந்தேக வாதத்தினால் கடவுள் ஒன்று இருக்கக் கூடுமென்று நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.

ஒரு கடவுள் அல்லது தெய்வம் உண்டென்ற நம்பிக்கைக்கு

சோம்பேறி வாழ்க்கை.

(மலாய் மணி)

நமது நாட்டு "முற்றுந்துறந்த முனிவர்" ஒருவர் அமெரிக்காவுக்குப் போனார். சென்ற நூற்றாண்டின் இறுதியில் அந் நாடு சென்று 'இந்து' சமயத்தின் மேன்மையை மேனாட்டுக்கு எடுத்துரைத்துப் பெரும்புகழடைந்த சுவாமி விவேகானந்தரைப்போலத் தாமும் சிறப்படைய அவர் எண்ணினாரோ, என்னவோ சொல்லமுடியாது. அவர் ஒரு நாள் காலையில் ஆட்சன்நதிக்கரையோரத்திற் படுத்து 'யோகம்' செய்து கொண்டிருந்தார். அதைக் காலையிலெழுந்து வேலை செய்து திரும்பிய ஒரு அமெரிக்கத் தொழிலாளி கண்டான். உடனே ஆத்திரங்கொண்டான். அவன் அம் 'முனிவரை' அனுமதித் தோளில் தட்டி 'சோம்பனே எழுந்து உன் வேலையைச் செய். கதிரோன் உதித்து வெயில் எரிக்கின்றதே! உனக்கு இன்னும் சோம்பல் ஒழியவில்லையோ?' என்று கடுகடுத்து மொழிந்தான்.

நமது "முனிவர்" சீறிச் சினந்தெழும்பினார். கோட்டாவி விட்டார் தொழிலாளியை விறைக்க முறைத்துப் பார்த்தார். கொக்கை யெரித்த கொங்கணவனுக்கும், வெகுண்டபொழுதெல்லாம் தமக்கெதிர்ப்பட்டோரைச் சபிக்கும் துருவாசனுக்கும்இருந்த ஆற்றல் தமக்கில்லையேயென்றேங்கினார். பிறகு சமாளித்து எழுந்து உட்கார்ந்துகொண்டு "ஓய் மனிதனே! யாம் எம் மனத்தை யடக்கி யோகம் புரிந்துகொண்டிருக்கை

அறியாமையே காரணம். சரித்திர காலத்துக்கு முற்பட்ட நாகரிக காலத்துத் தோன்றிய அவ்வுணர்ச்சி காலக்கிரமத்தில் வளர்ந்து மக்கள் மனத்து வேரூன்றி விட்டது.

நாஸ்திகமே மறுக்க முடியாத நிலை.

கடவுளே இல்லை.

யில் உன் அறிவீனத்தின் திமிரால் எம்மை எழுப்பி உல்லங்கனம் செய்துவிட்டாய். ஆயினும், சிறியோனும் அற்பனுமாகிய உன்னை நாம் கண்டியாது பொறுத்து ஆசீர்வதித்தனுப்ப வேண்டியதே தருமமாகும். எளிய வாழ்க்கையும், உயரிய நோக்கமுங்கொண்ட எம்மனோரது சிறப்பு நிலைமையை உலோகாயுதத்தில் உழலும் நீ அறியாய். பேதாய்! உன் வழியே செல். என்னை ஏன் அலட்சிக்கின்றாய்?'' என்று தத்துவம் ததும்ப மொழிந்தார்.

அதைக் கேட்டதும் அமெரிக்கன் பெருஞ் சத்தமிட்டு, நகைத்துக்கொண்டே ''சோம்பனே உனது சோம்பலை நீக்கி வெயில் காய்ந்துகொண்டிருந்த நீ 'யோகம்'' புரிகின்றேனென்கின்றாய். கல்வி யறிவும், பகுத்தறிவும் அற்ற இந்தியாவில் உனது ''யோகம்'' விலைப்படும். ஆனால் இந் நாட்டில் உன்னை யாரும் கவனியார். நீ தயவுசெய்து எழுந்து ஏதாவதொரு வேலை தேடிச்செய்ய முற்படு. கீழ்நாட்டாரது சோம்பற்றனத்தை தயவுசெய்து இந் நாட்டில் புகுத்திவிடாதே. இதுவே என் வேண்டுகோள்'' என்று கூறிவிட்டுத் தன் வழியே சென்றான். அதன் பின்னர் நமது ''முனிவர்'' எக் கதி யடைந்தாரோ தெரியாது. அதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையுமில்லை. கவனிக்கவேண்டியதுமதுவல்ல.

மேற்குறிப்பிட்ட செய்தி சில ஆண்டுகட்கு முன் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அக் காலத்தில் நம் நாட்டில் ''தேச பக்தர்''கள் இல்லாதிருந்தமையால் அதைப்பற்றி எவரும் கவனித்தாரல்லர். இக் காலத்தில் அம் மாதிரிச் சம்பவமொன்று நிகழ்ந்ததாயின் நமது 'தேச பக்தர்'கள் அமெரிக்காவுக்கும் அட்சன் நதிக்கும் எதிராய் 'சத்தியாக்கிரகம்' தொடங்கிவிடுவர்! நிற்க, குறித்த சம்பவத்திலிருந்து நமக்கு விளங்குவதென்ன? ஆசியாக்கண்டத்தாராகிய நாம் சோம்பேறிகளென்பது மிக மிகத் தெளிவாய்த் தெரிகின்றதன்றோ? அதிலும் இந்தியராகிய நாம் தடிச்சோம்பேறிகள் என்பது மறுக்க முடியாத உண்மை. இச் சோம்பலுக்கு மூல காரணம் யாது? இம்மியேனும் ஆசங்கையின்றி நமது சமயமே நமது சோம்பலுக்குக் காரணம் என்றும் எட்டுணையும் தடையின்றிக் கூறலாகும்.

ஆசியாக் கண்டத்துத் தேசங்களில் முக்கியமானவை மூன்றே யாகும். அவை சீனா, ஜப்பான், இந்தியா. அவற்

ளுள் பௌத்த சமயத்தை அனுசரித்து வந்த ஜப்பான் அச் சமயத்தின் மூலாதாரக் கொள்கைக் கெதிராய் புலால் உணவை யருந்தி, போர்த்தொழிலை மேற்கொண்டு பல நூற்றாண்டுகளாய்த் தன்னைக் கீழ்ப்படுத்தி வைத்திருந்த மதப்பிரமையை ஒழித்துவிட்ட படியால் முன்னேறி விட்டது. அடுத்தாற் போல சீனாவும் சமயப் பிடிப்பினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு வருகிறது. என்று அத்தேசம் மதக்கட்டிலிருந்து விடுபடுகிறதோ அன்றே அதன் விடுதலை முற்றுப்பெறும்.

ஆனால் பாழும் இந்தியாவில் சமயக்கட்டுப் பாட்டிற்கு அளவு கடந்த மதிப்பு இன்னும் அளிக்கப்பட்டு வருகிறது. உடலை வளைத்து உழைப்பதற்கு மாறாக சமயம் வீண் தத்துவம் பேசுகின்றது. சோம்பலை வளர்ப்பதற்குச் சாம்பலைப் போற்றும் சமயம் உதவி புரிகின்றது. கீழ் நாட்டின் நாகரிகத்தைக் கறைப்படுத்தியது எம்சமயங்களே. ஆசியாக் கண்டத்தார் ஐரோப்பா கண்டத்தாருக்கு அடிமையாயிருப்பதற்கு மூலகாரணம் நமது போலிச் சமய உணர்ச்சியேயாம்.

நம்மனோர் கோழைகளாய் விட்டதற்கும் மதமேகாரணம். 'யோகம்,' 'நிட்டை,' 'தவம்,' 'தபசு' முதலிய போலி அப்பியாசங்களால் சோம்பல் வளர்க்கப்பட்டு வருகின்றது. "சும்மா விருப்பதுவே சுகம்" என்ற முட்டாள் தனமான போலித் தத்துவ உணர்ச்சி இந்தியாவிலிருந்து வெருட்டியடிக்கப் படல் வேண்டும். சோம்பற்றனத்தை சமயம் "உயர்ந்த நிலை" யெனப்போற்றுவதை உழைப்பாளிகள் எள்ளி நகையாடிக் கைகொட்டி இழிவுப்படுத்தல் வேண்டும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பாட்டைப்பாடிக்கொண்டு உடலை வளையாமல், உழையாமல் உலகுக்குப் பாரமாயிருக்கும் போலிச் சமய குருவர்களை அடித்து உழைக்கும்படி வற்புறுத்த வேண்டும்.

"சமயம் அபினி போன்றது" என்ற சொல் எவ்வளவு உண்மையானது! கட்குடியனும், சமய வெறியனும் ஒன்றே, ஒரே நிலையினரே. வேலை செய்யும் நேரத்தில் அருத்தமற்ற பாடல்களைப் பாடிக்கொண்டு "கடவுளை" அகக்கண் கொண்டு பார்க்க எண்ணும் சோம்பலரான "சாமி"களைத் தடி கொண்டு தாக்கி, இடுப்பொடிய அடித்துத் துரத்தவேண்டும். பாடுபட்டவரே பலன் அனுபவிக்க அருகதையுடையவர். வாய் பொத்தி, கை கட்டி, கால் கூட்டி, மூக்கைப் பிடித்துக் கொண்டு நின்று "கடவுள்" உணர்ச்சியில் "ஆனந்தப் பரவசம்" அடைய விரும்பும் மனிதன் இவ்வுலகிலிருக்கத் தகுதி யற்றவன். அவனை உடனே "மறுவுலகம்" அனுப்பி விட

வேண்டும். ஏனெனில் அவன் சோம்பனாய்க்கெட்டுப்போவதன்றிப் பிறரையும் தீயவழிக்குட் படுத்திவிடுகிறான்.

தோழர் திரு. வி. கலியாண சுந்தரம் எழுதிய 'இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்' என்ற நூலை அண்மையில் வாசித்தேன். அதனை வாசித்த பின் அவருக்கு 'அழுகணிச்சித்தர்' என்ற சிறப்புப்பெயரைச் சூட்ட முடிவு கட்டினேன். அவர் அந்நூலில் கண்ணீர்விட்டுக் கதறியழுதிருக்கிறார். பிறரையும் அழச்சொல்லுகிறார். 'மனங்குழைந்து அழுங்கள் கண்ணீர் விடுங்கள்' என்பதே அவர் தமிழ்நாட்டு வாலிபருக்குக்கூறும் 'இதோபதேசம்'. இத்தகைய நூல்கள் நம்மைச் சோம்பலில் உரனடையச் செய்யுந்தன்மையன. ஏற்கனவே யுள்ள ஆயிரக்கணக்கான 'சமய நூல்'களால் இந்தியர் சோம்பித்திரியும் பேதையராகிவிட்டனர். இன்னும் அதே தொனியில் அழுகுரலில் நூல்கள் எழுதப்படுமாயின் நாம் அடிமைகளாய் அழியவேண்டியதே.

இந்தியன் அன்னியனுக்கு அடிமையாய் இருக்கக்காரணம் அவனது சமய உபதேசமும் சமய நூல் கட்டளையுமே.

ஐரோப்பியர் 'உனது ஒரு கன்னத்தில் அடிப்பவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு' என்ற தமது 'கடவுளி'ன் 'இதோபதேச'த்தை மாற்றி 'மறு கன்னத்தில் திருப்பிக்கொடு'த்து மார்மேலும் ஒரு உதை கொடு என்று எழுதி, அதையே அநுசரித்து வந்தமையால் அவர்கள் சிறப்புடன் வாழ்வதன்றி உலகையே கட்டியாள்கின்றார்கள். அவ்வாறே ஜப்பானியரும் பௌத்த சமயத்தின் தன்மையை (ஜீவகாருண்யம்) கொல்லாமை, துன்புறுத்தாமை முதலிய கொள்கைகளை ஏட்டில்கட்டி வைத்துவிட்டு, தோள்தட்டி, தமது வலிமையைப் பிரயோகித்து வந்தமையால் வெள்ளையரையுந் தோற்கடித்து வல்லரசுக்காரராக உயர்ந்தனர்! ஆனால் 'இந்துக்களோ'வெனில் தமது 'கடவுள்'களது செயல்களையே மறந்தவராய் இருந்து கொண்டு 'இருப்பது பொய் போவது மெய்' சரீரம் அநித்தியம் வாழ்க்கை மாய்கை என்று வீண் வேதாந்தம் பேசுகின்றனர். ஆனால் இராமன், கந்தன், விஷ்ணு, சிவன், கிருஷ்ணன் முதலான 'கடவுள்'கள் போர் புரிந்து தமது புயவலிமையைக் காட்டினதாய்ப் புராணங்கள் எழுதி வைத்துக்கொண்டு நாம் பேடியாய்ப் பேதைகளாய்க் காலங்கழிக்கின்றோம்.

மேனாடும் சமயத்திற்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில் மிகத்தாழ்ந்த நிலைமையிலேதானிருந்தது. மேனாட்டில் சமயம் மக்களின் இரத்தத்தையே உறிஞ்சிக்கொண்டிருந்தது.

சமயகுரவர் திருட்டுக்குரவராய் மக்கள் உழைப்பில் உண்டு உடுத்து உறங்கி உலகை அநுபவித்து வந்தனர். தடிச்சோம்பரான அவர்கள் தம்மை வணங்கினோரையும் சோம்பராக்கினர். பிறகு மேனாட்டு மாந்தர் கண்விழித்து சமயத்தைச் கைவிட்டு உழைப்பில ஊக்கஞ்செலுத்தினர். அதன் பயனாய் உலகம் அவர்கள் வசமாயிற்று.

நமது இளைஞர்கள் இம்முக்கிய பிரச்சினையில் ஊக்கங் கொள்ளுதல் வேண்டும். சமயத்திற்கு முக்கியமும் முதன்மையும் நம்மனோர் கொடுத்து வந்தமையால் நமது நாடு பாழடைந்தது. நம்மைச் செயலற்ற சோம்பராக்கிய சமயத்தை நாமேன் கவனிக்க வேண்டும்? நமது முன்னோரும், நாமும் பல நூற்றாண்டுகளாய்ச் சமயத்திற்கும் 'கடவுள'க்கும் தொண்டு செய்தும் நாமடைந்த பலன் யாதோ? நெறிகெட்ட சமயமும் 'கடவுளும்' உண்மையில் நம்மைச் சிறிதும் கவனிக்கவில்லை. நம்மைக் கவனியாத ஒரு மனிதனை நாம் கவனிக்கின்றோமா? கவனிப்பின் அது சுயமரியாதைக் கேற்றதாமா? இல்லையே! அங்ஙனமிருக்க ஏனோ நாம் முட்டாள்தனமாக நம்மைக் கவனியாத சமயத்தையும் 'கடவுளை'யும் கட்டிக்கொண்டழுதுகொண்டு நமது செல்வத்தையும், அறிவையும், சுதந்தரத்தையும் அவற்றிற்கு பறி கொடுத்து இடர்ப்படவேண்டும்? மேனாட்டினர் மட்டுமன்றி சமீபத்தில் முற்போக்கடைந்த ஜப்பானியர், சீனர் முதலிய கீழ்நாட்டினரும் நம்மனோரது சோம்பற்றனம், கோழைத்தனம், வீரமின்மையைக்கண்டு கைகட்டிச் சிரிக்கின்றனர். நாம் வெட்கத் தலை கவிழுமாறு நமது சமயமும், 'கடவுளும்' நம்மைத் தாழ்த்தி விட்டனவே!!

இந்திய இளைஞரே! கீழ்நாட்டைச் சேர்ந்த ஜப்பானியரும், சீனரும் சமயத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு மனிதராய் விளங்கும்போது இந்தியராகிய நாம் மாத்திரம் இன்னும் சமயத்தின் சூழ்ச்சியிலும் சூழலிலும் அகப்பட்டு அவதியுறுகின்றோம். நாம் 'சாமி'களாகவும் முனிகளாகவும் முயல்கின்றோமேயன்றி கருமவீரராக முயல்கின்றோமில்லை. எனவே சோம்பலில் நாம் கிடந்துழல்கின்றோம். இனியேனும் 'முற்றுந்துறந்த முனி'வரையும் கண்டித்துத் தொழில் புரியுமாறு வேண்டிய அந்த அமெரிக்கத் தொழிலாளியின் ஆலோசனையின்படி நாம் தொண்டாற்றுந்தீரராக விழைவோமாக. ஆசியாகண்டத்துச் சோம்பற்றனமும் இந்தியநாட்டுத்தடிச் சோம்பலும் ஒழியும் வண்ணம் நாம் முனைந்து பாடுபடுவோமாக.

மதபோதனை ஒழியுமா?

(எம். ஜே. கோல்டு.)

அன்பார்ந்த வாசகர்களே! என் கேள்விக்கு நீங்கள் அவசரப்பட்டு விடையளிக்க வேண்டாம். பக்கா அறிவியக்க வாதிகளான நீங்கள் மதபோதனைகள் ஒழியவேண்டுமென்று தான் விரும்புவீர்கள். எனினும் நிதானமாக யோசித்து விடையளித்தால் போதுமென்று நான் கூறுகிறேன்.

புத்தர் இந்தியர்களுக்குப் போதனை செய்ததாவது:—

''ஓ துறவிகளே! துன்பங்களை ஒழிக்கும் உண்மை வழி இதுவே. இதுவே சிறந்த எட்டுவழிகள்—நல்ல அபிப்பிராயம்—நல்லெண்ணம்—நற்சொல்—நற்செயல்—நல்வாழ்வு—நன் முயற்சி—மனச்சாந்தி—ஒரு முகப்பட்ட சிந்தனை.

ஈசாயா ஹிப்ருக்களுக்குப் போதனை செய்ததாவது:—

''என்மேல் தேவ ஆவி இறங்கியிருக்கிறது. சாதுக்களுக்கு நல்லுபதேசம் செய்யும்படி ஆண்டவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். மனமுடைந்தவர்களுக்கு சாந்திய ளிக்கவும் அடிமைகளுக்கு சுதந்தரமளிக்கவும் ஆண்டவன் என்னை யனுப்பியிருக்கிறார்.

முகமது அராபியர்களுக்குப் போதனை செய்ததாவது:—

''என்னைப்போல் உங்களுக்கு நன்மை செய்யக்கூடியவன் அராபியாவில் வேறு இல்லவே இல்லை. மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் நான் உங்களுக்கு இன்பமளிக்கிறேன். உங்களையெல்லாம் அழைத்து வரும்படி ஆண்டவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

இயேசு யூதர்களுக்கு உபதேசம் செய்ததாவது:—

''எனது பரம பிதா எனக்குச் சர்வசக்திகளையும் அளித்திருக்கிறார். கஷ்டப்படுகிறவர்கள் எல்லாம்—துன்பப்படுகி

றவர்கள் எல்லாம்—என்னிடம் வாருங்கள்—ஆறுதலளிக்கிறேன். என் பாரத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்—என் போதனைகளைக் கேளுங்கள். நான் சாது—எளியன் என்னை நம்பினால் உங்கள் ஆத்மா சாந்தி யடையும்.

அவர்களைப் பின்பற்றி பல்லாயிரக்கணக்கானவர்கள்—போனிபேஸ்—பிரான்சிஸ்—லூதர்—பாக்ஸ்—வெஸ்லி—மூடி—போன்றார்—அவர்களைப்போலவே உபதேசம் செய்திருக்கிறார்கள். கடைசியாக 1936 ஜூன் மாதத்தில் ஜிப்சி ஸ்மித்து என்ற பாதிரியார் தாம் இதுவரை 45,000,000 பேரை கிறிஸ்துவின் பாதங்களை வணங்க மனம் திருப்பியிருப்பதாகவும் தம்மை லாயிடு ஜார்ஜ்—கண்டர்பரி அத்யட்சர் போன்ற மேதாவிகள் பாராட்டியிருப்பதாகவும் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் தெரிவித்திருக்கிறார்.

மேலே கூறப்பட்டவர்கள் செய்த மதபோதனைகளில் அநேக நீதிகள் அடங்கியுள்ளன என்பதை நான் தடையின்றி ஒப்புக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி விவாதிக்கத் தேவையேயில்லை. சந்தேகம் கொள்ளவேண்டியதுமில்லை. உபதேசம் செய்வதினால் உபதேசிப்பவர் உயர்ந்தவர் என்றும் கேட்போர் தாழ்ந்தவர்கள் என்றும் ஏற்படுகிறது. உபதேசங்களைக் கேட்கிறவர்கள் உடலும் உள்ளமும் குறுகியது என ஏற்படுகிறது. அத்துடன் அவர்களது அடிமை மனப்பான்மையும் வெளியாகிறது. பிறர் உதவியை நாடுவோர் அடிமைகள் தானே. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். முற்கால—தற்கால அரசியல் பிரசங்கிகளைப்பற்றி நான் பேசவில்லை—அவர்களை நான் கண்டிக்கவில்லை. ஏனெனில் தம் பிரசங்கம் கேட்க வருகிறவர்களைத் தட்டிக்கொடுக்கும் பொருட்டு அவர்கள் எல்லாம் மேதாவிகள் என்றும் அறிவாளிகள் என்றும் பீடிகை போட்டுக் கொண்டு அவர்கள் பேசத் தொடங்குகிறார்கள். ஆனால் சாமானிய மனிதன் தன் நிலைமையைப்பற்றி எண்ணும்போது தனது வறுமையையும்—ஏழ்மைகளையும்—கலகங்களையும்—போர்களையும் மற்றும் உலகத்துன்பங்களையும் பற்றி எண்ணும்போது-தெய்வீக உதவியையே நாடுகிறான். அத்தகைய சந்தர்ப்பங்கள் நிறைந்திருக்கையில்—மனோ நிலை ஏற்பட்டிருக்கையில்-மதங்கள் தோன்றி வளர்ந்து வந்தன. அந்த சந்தர்ப்பங்களையும் மனோ நிலைமையையும் ஒழித்து விட்டால் மதங்கள் அந்நிமிஷத்திலேயே ஒழிந்து விடும். அதனாலேயே பகுத்தறிவு கிளர்ச்சிக்காக நான் செய்யும் வேலைகளில் சமூக முன்னேற்றச்சார்பான வேலைகளை முக்கியமாக மதித்துச் செய்து வருகிறேன்;

மதங்களையும் மதாசிரியர்களையும் நான் தாக்குவதில்லை. சேரிகள் ஆஸ்பத்திரிகளுக்கு ஆதாரமாயிருப்பதுபோல மந்த புத்தியும் பயமும் மதங்களுக்கும் மதாசிரியர்களுக்கும் ஆதாரமாயிருக்கின்றன.

தற்காலத்து—முக்கியமாக சென்ற 50 அல்லது 60 வருஷமாக—பாமரர்களிடம் மதபோதகர்களின் செல்வாக்குக் குறைந்து வருகிறது. நீதிபோதனை செய்வோரையே—உலகத் துன்பங்களையொழிக்கும் மார்க்கம் காட்டுவோரையே-பாமர மக்கள் நாடிவருகிறார்கள். இதற்கு ஆயிரக்கணக்கான திருஷ்டாந்தங்களை எனக்குக் கூற முடியும். அந்த வேலையிலிறங்கினால் நான் எடுத்துக்கொண்ட விஷயத்தின் தொடர்பு அற்றுவிடும். எனினும் சில உதாரணங்களாவது நான் கூறாவிட்டால் என் கருத்து பலருக்கு விளங்காமல் போகலாம். எனவே பிரிட்டனில் ஆசிரியர் கில்பர்ட் மரேயையும் தென்னாபிரிக்காவில் ஜெனரல் ஜெ.ஸி.ஸ்மட்ஸையும் உதாரணமாக எடுத்துக்காட்டுகிறேன்.

அவர்களால் எவ்வளவு நன்மையான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன பாருங்கள்! பொருளாதார முன்னேற்றமே மிகவும் முக்கியமான விஷயம். மக்களின் பொருளாதார நிலை விருத்தியாகும்போது மக்களின் மனோ சக்தியும் விருத்தியாகிறது. தற்காலத்துக்கு கல்விப் பிரச்சினையே மிக முக்கியமென்று நான் வற்புறுத்துகிறேன். கல்வியபிவிர்த்தியினால் பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள்-முன்னேற்றச்சங்கங்கள்-பொது இலக்கியங்கள்-கலை, விஞ்ஞான நூல்கள்—பகுத்தறிவுச் சங்கங்கள் முதலியவைகளின் சக்தி—செல்வாக்கு விருத்தியடையும். கல்விப் பயிற்சி பெற்ற சமூகங்கள் மத வெறியர் பேச்சை காதில்போட்டுக்கொள்ள மாட்டா. பக்தி பரவசத்தினால் கண்ணீர் சொரிந்து கடவுள் புகழ்பாடும் பக்தர்கள் தொகையும் குறைந்துவிடும். சுருக்கக் கூறின் மதங்களுக்குச் சாவு மணி அடித்தாய்விடும்.

அம்மட்டோ!

இப்பொழுது பாமரமக்களை வசீகரிக்கும் நீதிபோதகர்களும்—வறுமையைப் போக்க வழிகாட்டும் ஜீவகாருண்யவாதிகளும் கூட கொஞ்ச காலத்தில் மறைந்துபோவார்கள். எத்தகைய உபதேசிகளையும் காணமுடியாது. ஏன்? சாஸ்திரீகமான நாகரிகம்—விஞ்ஞானக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட நாகரிகம்—பகுத்தறிவை ஆதாரமாகக்கொண்ட நாகரிகம் விருத்தியடையும்போது எத்தகைய உபதேசிகளுக்கும் தேவையிராது.

தாமஸ் பெயின்.

தாமஸ் பெயின் என்பார் பெயர் பெற்ற அறிவியக்கத்தலைவர். பல பகுத்தறிவு நூல்கள் எழுதியவர். அவரது இரு நூற்றாண்டு விழாக்கொண்டாட அமெரிக்காவில் தீவிரமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இரு நூற்றாண்டு விழாவின் அறிகுறியாக பாரிஸ் நகரத்தில் தாமஸ் பெயினின் உருவச்சிலை நாட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்து நார்போல்கு மாகாணத்தில் தெட்போர்டு என்னுமிடத்தில் 1737-ல் தாமஸ் பெயின் பிறந்தார். பெற்றோர் எளிய நிலைமையிலிருந்ததினால் உயர்தரக்கல்வி கற்க அவருக்கு வசதியேற்படவில்லை. பெற்றோர் போதித்த கல்வியுடன் அவர் திருப்தியடைய வேண்டியதாயிற்று. அவரது தந்தை பாய் மரக் கயிறு திரிக்கும் தொழில் நடத்தி வந்தார். எனவே மகனும் அத்தொழிலையே நடத்தி வந்தார். விவாகமான பிறகு அவர் கலால் இலாகாவில் உத்தியோகம் பெற்றார். அவ்வுத்தியோ

மகாஜனங்களே! பிறர்போதனையை நம்பி—அவர்களுடைய ஆணைக்குக்கட்டுப்பட்டு அடிமை வாழ்வு வாழ விரும்புகிறீர்களா? விஞ்ஞான சாஸ்திரக்கொள்கைப்படி—பகுத்தறிவுப்படி சமூகத்தைத் திருத்தி—வாழ்க்கை முறையை வகுத்து—எவர் உதவியையும் நாடாமல் சுதந்தரராயிருக்கப் போகிறீர்களா?

கல்வி விருத்தியடைய அடைய விஞ்ஞானம்—பகுத்தறிவு வளர்ச்சியடைகிறது. உலக முழுதும் விஞ்ஞான மயமாகும் போது—பகுத்தறிவு மயமாகும்போது—மதங்கள் ஒழியும்; மடமையொழியும்—வறுமை யொழியும்—அச்சம் ஒழியும்—அடிமை வாழ்வு ஒழியும்—சுதந்தரம் தாண்டவமாடும்.

விஞ்ஞான சூரியன் ஒளிவீசத்தொடங்கிவிட்டான். அந்தக் காலம் வெகுதூரத்தில் இல்லை.

கத்தில் இருக்கும்போது சிப்பந்திகளின் அந்தஸ்தை உயர்த்தக் கிளர்ச்சி செய்தார். 1774ல் அதாவது 37-வது வயதில் அவர் உத்தியோகத்தை இழந்து டாக்டர் பெஞ்சமின் பிராங்கிலினிடம் ஒரு சிபார்சுக்கடிதம் வாங்கிக்கொண்டு அமெரிக்காவுக்குச் சென்றார்.

அங்கே "பென்சில்வேனியா மகாஸின்" என்றபத்திரிகையின் ஆசிரியரானார். அடிமை வர்த்தகம் மாதர் முன்னேற்றம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பல காரமான கட்டுரைகள் எழுதிப்பெயர் பெற்றார். சுதந்தரப்போர் ஆரம்பமானபோது "பகுத்தறிவு" என்னும் பெயரால் ஒரு நூல் எழுதி 1776ல் வெளியிட்டார். அந்நூல் ஏராளமாகச் செலவாயிற்று. அப்பால் அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு பல துண்டுப் பிரசுரங்கள் தொடர்ச்சியாக வெளியிட்டுப் புகழ்பெற்றார்.

1790—ல் அவர் பாரிசுக்குச் சென்றார், அவர் அமெரிக்காவுக்குத்திரும்பியபோது பர்க்கு எழுதிய "பிரஞ்சுப் புரட்சியைப் பற்றிய சிந்தனைகள்" என்ற நூல் வெளிவந்தது. அதற்கு பதிலாக "மக்கள் பிறப்புரிமை" என்ற நூலை பெயின் வெளியிட்டார். அந் நூல் ஜார்ஜ் வாஷிங்டனுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. அப்பால் அவர் பிரான்சுக்குச் சென்று அந் நூலை பிரஞ்சு பாஷையில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். அவர் இங்கிலாந்துக்குச் சென்றபோது அவரைக் கைதுசெய்ய அதிகாரிகள் முயன்றார்கள். ஆனால் வாரண்டு பிறப்பதற்கு 20 நிமிஷங்களுக்கு முன் இங்கிலாந்தைவிட்டு வெளியேறித் தப்பித்துக் கொண்டார். "மக்கள் பிறப்புரிமை" என்ற நூலை பிரஞ்சுப்புரட்சியை ஆதரித்த கட்சியார் (இங்கிலாந்தில்) தமது கட்சிக்கு ஆதாரமான நூலாகஒப்புக்கொண்டார்கள், அதைப்பார்த்து பீதிகொண்ட பிரிட்டிஷ் சர்க்கார் அக் நூலை வெளியிட்டோர் மீதும் விதரணம் செய்தவர்கள் மீதும் வழக்குத்தொடுத்தார்கள்.

பெயின் பிரான்சிலே மிகச்செல்வாக்குப்பெற்றார். "பிரஞ்சு சிட்டிசன்" என்னும் பட்டமும் அவருக்கு அளிக்கப்பட்டது. பிரஞ்சுப் பார்லிமெண்டு மெம்பருமானார். அப்பால் "பகுத்தறிவு யுகம்" என்ற நூலை வெளியிட்டார். அதன் முதற்பாகம் வெளிவந்ததும் சிறைப்பட்டார். சிறையிலிருந்துகொண்டே இரண்டாம்பாகத்தை எழுதினார். கிறிஸ்துமதக் கொள்கைகளை அவர்வன்மையாகக் கண்டித்ததினால் அவருக்கு விரோதிகள் அதிகமானார்கள். 1802ல் அவர் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றார். 1809 வரை அங்கேயே இருந்தார். கடைசிக்காலத்தில் அவர் மிகக் கஷ்டப்பட்டார்.

சிறந்தமுறை! குறைந்தவிலை!! நிறைந்தகுணம்!!

மைண தைலம்

கை, கால், இடுப்பு, வலிகளுக்கும். நரம்புகள் சுளுக்கு, சதை பொருதல். அடி, காயம், தேள்கடி வாயுப்பிடிப்பு. வாதம். நீர்க்கட்டு. முதலியவைகளுக்கும். சஞ்சிவி, போன்றது. துளிக் கணக்கில் வலியுள்ள விடத்தில் நன்கு தேய்க்க குணம் தரும். விலை அணா 0.6.0

ஈ.வெ.த. வைத்தியசாலை ஈரோடு

அரை அவுன்சு புட்டி 1-க்கு
விலை அணா 0—6—0.

வியாபாரிகளுக்கு தக்ககமிஷன்
கொடுக்கப்படும்.

6 அணாவுக்கு வி. பி. எடுப்பது
சிரமமாகுமாதலால் 9 அணா ஸ்டாம்பு
அனுப்பினால் ஒரு புட்டி அனுப்பப்படும்.

முக்கியமான புஸ்தகங்கள்.

குறைந்த விலை.

இராமாயண ஆராய்ச்சி 1 முதல் 4 காண்டங்கள் சேர்த்து தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0

கர்ப்ப ஆட்சி, புது ரஷ்யா, புராணங்கள் ஆகிய மூன்றும் ஒன்றாய் தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0.

தபால் சார்ஜ் அணா 0—4—0.

மானேஜர்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

சந்தாவில் ஆதாயம்

பிந்துபவர்களுக்கு சென்ற வருடம் போல் முக்கிய இதழ்கள் கிடைக்காமல் போகும்படி நேரும்.

பகுத்தறிவும் குடிஅரசும்

2-ம் சேர்த்து வரவழைக்கும்

சந்தாதாரர்களுக்கு ஜூலை மீ வரையில்

உள்நாட்டுக்கு வருஷ சந்தா 3—8—0
வெளி நாட்டுக்கு 5—8—0

"பகுத்தறிவு"

பகுத்தறிவு பத்திரிகையின் முதல் ஆண்டின் பன்னிரண்டு பிரதிகளையும் சேர்த்து இரண்டு புத்தகங்களாக சாதாரண பைண்ட் செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் சொற்ப காப்பிகளே கைவசம் இருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்.

பகுத்தறிவு சந்தாதாரர்களுக்கு ரூ. 1—0—0
மற்றவர்களுக்கு 1—8—0

மானேஜர்

பகுத்தறிவு, ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0
கடவுள் ... ... ,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0
வால்ட்டேர் ... ... ,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு ... ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம் 0 6 0
ஷை II-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0
ஷை 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ... ,, 0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. ஜா. பி.) 0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
25.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
39.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
34.	நரகம் எங்கே?	0	2	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.